ஜகன் மோகினி

டிசம்பர்
1954

JAGAN MOHINI

ESTD. 1923

அண
நான்

123
1-55

OF BOOKS
OFFICE
7 - JAN 1955
MADRAS



1954·31·12

அகில இந்திய ரேடியோவில்

ஸ்ரீ ஆண்டாள் புகழ்

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஸ்ரீ ஆண்டாளைப்பற்றி அனேக கவிவாணர்கள் பாடியுள்ளார்கள். வில்லி யென்னுங் திவ்யகவி ஆண்டாட்கு சந்திரகலாமாலை சாற்றினார். ஸ்ரீ ஆண்டாளுடைய திவ்ய அனுக்ரகத்தைப் பெற்றே இவர் இதனைப் பாடினார் என்பது இவரது அத்புத சரித்திரத்தினின்று வெளியாகிறது. சென்னை ரேடியோவில் இந்த டிஸம்பர் மாதத்தில் ஷை சந்திரகலாமாலை இசை நிகழ்ச்சி '4' பாகங்களாக ஒலிபரப்பப்படும்.

3-12-54	வெள்ளிக்கிழமை	1 மணி முதல் 1-30	
10-12-54	,,	,,	
17-12-54	,,	,,	
24-12-54	,,	,,	

ஷை சரித்திரம் முடிந்தபிறகு, கடைசி வெள்ளிக்கிழமை 31-12-54 அன்று 1 மணி முதல் 1-30 வரை சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற இசை நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும்.

ஷை 5 இசை நிகழ்ச்சிகளையும் எழுதி, தயாரித்து, நடத்துபவர் நமது 'மோகினி' ஆசிரியை வை. மு. கோதைநாயகி அம்மாள். இக் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர்கள் வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன், ஜி. பி. கமலா, மற்றும் நிலைய கோஷ்டி.

"செந்தா மரைத்திரு வோதிருப் பாற்கடற் றெள்ளமுதோ
நந்தா தொளிர்விளக் கோசெய்ய ஞானத்தி னற்கொழுந்தோ
சிந்தா மணியோ வெனவிண்டு சித்தன் றினமுமகிழ்
கொந்தார் குழற்கோதையை வாழ்த்தி
வரமென்றன் கோழைநெஞ்சே!"

பகவத்விஷய ரஸாநுபவம்

[திருவாய்மொழிப் பொருளமுதவெள்ளம்.]

1774

ஸ்ரீ காஞ்சி மஹா வித்வான் உ. வே. ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

[ஜகத்ஸ்ருஷ்டியின் மருமம் இவ்விதழில் வெகு விரிவாக எழுதப்பட்டுள்ளது. விஷயம் மிகக்கடினமாயினும் தமிழில் இதற்கு மேல் தெளிவாக்க முடியாது. தமிழ் மக்களுக்கு இது ஒரு பெரு விருந்தே!
—ஆசிரியர்.]

திருவாய்மொழி - முதற்பதிகம் - எட்டாம் பாட்டு.

"சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும்
வரன்முதலாய் அவைமுழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித்து அமரர்க்கு மறிவியந்து
அரனயனென வுலகழித்தமைத்துளனே."

உலகில் ஒவ்வொரு வஸ்துவையும் நாம் தெரிந்துகொள்ளும்போது அவற்றின் லக்ஷணங்கொண்டு தெரிந்துகொள்ளுகிறோம். ஒன்றுக்கே உரித்தான தன்மையைக் கூறுவது லக்ஷணமெனப்படும். ஒவ்வொரு வஸ்துவையும் நாம் கட்கூடாகக் காண்பதனால் கண்ணால் கண்ட தன்மைகளையிட்டு லக்ஷணம் கூறமுடிகின்றது. எம்பெருமானை நாம் கண்ணால் காண்கின்றிலோம்; அவனைக் 'கட்கிலீ!' என்றே ஆழ்வார்களும் அழைக்கின்றார்கள். கட்கிலி யென்பதற்குக் கண்ணுக்குத தெரியாதவனென்று பொருள்.

"என்றேனுங்,

கட்கண்ணால் காணாதவவ்வுருவை நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணுமுணர்ந்து"

என்று இவ்வாழ்வார் தாமே பெரியதிருவந்தாதியென்னும் பிரபந்தத்திற் கூறியுள்ளார். உபநிடதங்களிலும் அடிக்கடி 'எம்பெருமான் மாமிசக்கண்ணுக்கு ஒருவர்க்கும் புலப்படாதவன்' என்று கூறப்படுகின்றது. ஆக, ஒருவர் கண்ணுக்கும் புலப்படாத பொருளான கடவுளுக்கு நாம் எப்படி லக்ஷணம் கூறமுடியுமென்கிற சங்கைவரின், பகவான் நம்முடைய மாமிசக் கண்ணுக்குப் புலப்படாதவனாயினும் யோகிகளின் உட்கண்ணுக்குப் புலப்படுபவனேயாதலால் அவர்கள் நன்கு கண்டறிந்து அக்கடவுளுக்கு லக்ஷணம் கூறியேயிருக்கின்றார்கள். எனவே, சாஸ்திரங்களினால் எம்பெருமானுடைய லக்ஷணம் தெரிவிக்கப்படுகின்றதென்றவாறு. தைத்திரீய உபநிஷத்தில் "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்று தொடங்கியுள்ளவொரு பகுதியினால் பரமபுருஷனது லக்ஷணம் தெரிவிக்கப்பட்டே யிருக்கின்றது. அதாவது, உலகங்களையுண்டாக்குதல் காப்பாற்றுதல் அழித்தல் ஆகிய மூன்றுஞ் செய்யவல்லது எதுவோ அதுவே பரப்ரஹ்மம் என்று கூறப்பட்டுள்ளது.

உலகத்திற்கு முழுமுதற் கடவுளாக ஒரே வஸ்துதான் இருக்க முடியும். அந்த வொரு வஸ்துவையே பரமபுருஷனென்றும் பரப்ரஹ்மமென்றும் கடவுளென்றும் எம்பெருமானென்றும் பல பல பெயர்களால் வழங்கி வருகிறோம். உண்மை இப்படியிருக்கவும், படைப்புத் தொழிலைப் பிரமன் நடத்திவருகிறானென்றும், காத்தல் தொழிலை ஸ்ரீ மஹாவிஷ்ணு நடத்தி வருகிறாரென்றும் ஸம்ஹாரத் தொழிலைப் பரமசிவன் நடத்திவருகிறானென்றும் சொல்லி வருகிறோம்; இப்படி நாம் சொல்லிவருவதேயல்லாமல் நூற்கொள்கையும் இதுவாகக் காண்கிறது. இஃது உண்மையாயின் முன்னே யெடுத்துக்காட்டிய "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்கிற உபநிஷத்வாக்கியமானது ஒரே பொருள்தான் படைப்பதும் காப்பதும் கெடுப்பதும் செய்வதாகத் தெரிவிக்கின்றதே, அது பொய்யா? என்கிற கேள்வி எழுகின்றது.

இங்கு உண்மை என்னவென்றால், உண்மைக்கு மாறாக உபநிஷத்து ஒருகாலு மோதாது. பல உபநிடதங்களில் ஓதியுள்ளபடி பரமபுருஷனாகிய ஒருவனே படைத்தல் முதலிய மூன்று காரியங்களையும் நிர்வாஹம் செய்து வருகிறான். மூவர் மூன்று காரியங்களைச் செய்து வருவதாகத் தெரிவிக்கின்ற நூல்களும் உண்மையுரைப்பனவே. ஒன்றோடொன்று முரண்படச் சொல்லுகிறதல்லவா இது என்று நினைக்க வேண்டா.

ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஓர் ஆசிரியரைத் தலைவர் என்கிறோம்; எல்லாக் காரியங்களையும் இவரே நிர்வஹித்து வருகிறார் என்றும் சொல்லுகிறோம். உடனே வேறு சில நபர்களைக்காட்டி இவரும் ஆசிரியர், இவரும் ஆசிரியர் என்கிறோம். இவை ஒன்றோடொன்று முரண்பட்ட வார்த்தைகளென்று யாரும் நினைப்பதில்லை. ஒரு பேராசிரியர் முக்கியமாகத் தாம் சில காரியங்களை நிர்வஹிப்பதும், வேறு சிலரைக்கொண்டு வேறு சில காரியங்களை நிர்வஹிப்பதுமாக இருந்தாலும் அவரொருவரையே தலைவராகச் சொல்லுவதை ஆக்ஷேபிப்பவர்களோ மறுப்பவர்களோ யாருமிலர். அவ்வண்ணமாகவே ஸ்ரீமஹாவிஷ்ணு முக்கியமான காத்தல் தொழிலைத் தன் பொறுப்பாக வைத்துக்கொண்டு, படைப்புத் தொழிலைப் பிரமன் தலையிலே வைத்தும், சங்காரத் தொழிலைச் சிவபெருமான் பக்கலிலே வைத்தும் லோக நிர்வாஹம் செய்து போருவதாக நூற்கொள்கை காணக்கிடக்கின்றது.

[ஆக்குந் தொழிற்கு விரிஞ்சியை வைத்து
அழிக்குந் தொழிற்கு அரனைவைத்து,
காக்குந்தொழில் தான் கைக்கொண்ட கடவுள்]

இப்படி,படைத்தல் கெடுத்தலாகிற இரண்டு காரியங்களை வேறு இரண்டு தெய்வங்கள் செய்தாலும் செய்விப்பவனான பரமபுருஷன் ஒருவனே யாதலால், அவ்வொருவனே இவை மூன்றும் செய்து போருகிறானென்று சாஸ்த்ரங்கள் தெரிவிப்பதில் குறையொன்றுமில்லை—என்னும் விஷயத்தை நெஞ்சிற் கொண்டு இப்பாட்டு அருளிச் செய்யப்படுகின்றது.

வேதாந்தங்களில் ஸ்துதிப்பவனும் எம்பெருமானேயென்றும், அனைத்துலகுக்கும் ஆத்மாவாய் நிற்பவனும் அவனேயென்றும், உலகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்து

123(86.

இறவனும் அவனே யென்றும் கீழ்ப்பாசுரங்களில் அருளிச்செய்த ஆழ்வாரை நோக்கி, 'இப்படி எல்லாப் பெருமைகளையும் ஒருவன் தலையிலேயே ஏற்றிச் சொல்லிவிடலாமா? பிரமன் முதலான தேவர்களும் சில அரிய பெரிய காரியங்களை நடத்திப்போருவதாக வேத இதிஹாஸ புராணங்கள் முதலிய நூற்களில் விளங்காநின்றதே; சிவபெருமான் த்ரிபுரஸம்ஹாரமாகிற மிகப்பெரிய அருந்தொழிலை நடத்தினனென்றும் ஸகலலோகத்தின் ஸம்ஹாரத் தொழிலுக்கு அதிகாரியாயிருக்கின்றானென்றும், பிரமனும் தேவர்களுக்கெல்லாம் ஞானோபதேசம் செய்கிறானென்றும், லோகஸ்ருஷ்டியை நடத்திப்போருகிறானென்றும் பிரமாணங்களினால் நன்கு விளங்கும் போது எல்லாப் பெருமைகளையும் விஷ்ணுவாகிற ஒரு வ்யக்தியின் மேலேயே ஏறிட்டுச் சொன்னால் இது பக்ஷபாதத்தாலே சொல்லுகிறதாக ஆகுமே' என்று சிலர்கூற, அவர்கட்குத் தெளிவு பிறக்குமாறு அருளிச்செய்யும் பாசுரம் இது.

இப்பாட்டின் முன்னடிகளில் ஸ்ருஷ்டியையும் ஸம்ஹாரத்தையும் பற்றி மாத்திரம் பேசியிருக்கின்றது; பின்னடிகளில், பரமசிவனும் பிரமனும் செய்த காரியங்களையே எடுத்துரைத்துள்ளது. நாராயணனுடைய தொழில் ஒன்றும் இதில் சொல்லப்பட்டிருக்கவில்லை; இதற்கு யாது காரணமென்னில், கேண்மின்;

ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்னும் மூன்று காரியங்களில் ரக்ஷிப்பதாகிற ஸ்திதி யென்னுங் காரியம்மாத்திரம் எம்பெருமானுடையதே யென்றும், மற்ற இரண்டு காரியங்கள் இரண்டு தெய்வங்களினுடையதென்றும் நினைத்துக் கேட்பவர்களுக்கு விடை கூறுகிற பாசுரமிதுவாதலால் அவர்களுடைய நினைவின்படி ரக்ஷணத்தொழில் எம்பெருமானுடையதென்பதில் விவாதமில்லாமையாலே எதிரிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அவ்விஷயத்தை மீண்டும் தாமெடுத்துக்கூறி ஸ்தாபிக்கவேண்டிய அவசியமில்லை யென்றும், விவாதாஸ்பதமான மற்ற இரு தெய்வங்களின் காரியங்களைப்பற்றியே இங்கு உண்மையைப் பேசவேண்டு மென்றும் திருவுள்ளம்பற்றிய ஆழ்வார் அவ்விஷயத்தையே இப்பாட்டில் ப்ரஸ்தாவஞ் செய்கிறாரென்று உணர்க. படைத்தல் கெடுத்தலாகிய இரண்டு காரியங்கள் வேறு இரண்டு தெய்வங்களுக்குச் சொந்தமானவை என்கிற நினைவைக் குலைத்து, எல்லாத் தொழில்களும் எம்பெருமானுக்கே சொந்தமானவை யென்று தாபிப்பதே இப்பாட்டின் உயிர் நிலையென்க.

"சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும் வரன் முதலாய்" என்ற விடத்துத் தெரிந்துகொள்ளவேண்டிய வேதாந்தவிழுப்பொருள்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவுமுணர்த்துகிறோமிங்கு.

வைதிகர்களின் ஸித்தாந்தத்தில், சித்து அசித்து ஈச்வரன் என மூலப்பொருள்கள் மூன்றே. இவையே தத்வத்ரயம் எனப்படும். எல்லாவுலகங்களினுடையவும் பிறப்புக்குக் காரணம் பரப்ரஹ்மமெனப்படுகிற ஈச்வரனே. காரணம் என்கிறசொல் ஒன்றாயினும் மூன்று வகைப்பட்ட காரணங்களை உணர்த்தும் சொல் இது. உலகில் ஒவ்வொரு காரியப்பொருளுக்கும் உபாதான காரணம், நிமித்த காரணம், ஸஹகாரி காரணம் என மூன்று

காரணங்களுண்டு. மண்ணினாலாகும் ஒரு பானைக்கு இம்மூன்று காரணங்களும் இன்றியமையாதனவாகுந் தன்மையைக் கட்கூடாகக் காண்கிறோம்: இங்கு மண் உபாதான காரணமாகின்றது. குயவன் நிமித்த காரணமாகின்றான். சக்கரம் தடி தண்ணீர் முதலியன ஸஹகாரி காரணங்களாகின்றன. மண்ணே பானையாக மாறுபடுதலால் அது உபாதான காரணமெனப்படுகின்றது. நூலே துணியாக மாறுபடுதலால் துணிக்கு நூல் உபாதான காரணமெனப்படும். பானையைக் குயவனே முன்னின்று இயற்றுவதனால் அவன் பானைக்கு நிமித்த காரணமெனப்படுகிறான். துணியைச் சேணியனே முன்னின்று இயற்றுவதனால் அவன் துணிக்கு நிமித்த காரணமெனப்படுகிறான். சக்கரம் தடி தண்ணீர் முதலிய உதவிக் கருவிகளின்றிப் பானை பண்ணமுடியாதாதலால் அவை ஸஹகாரி காரணமெனப்படுகின்றன. இங்ஙனமே துணிக்கும் தறிப்பலகை முதலியன ஸஹகாரி காரணமாகின்றன.

தவிர, வைதிகதர்சனத்தில் இல்லாத வஸ்துவுக்குப் புதிதாக உற்பத்தியென்பது ஒரு நாளும் கிடையாது. ஒருவிதமான அவஸ்தை(நிலை)யோடு கூடியிருந்த ஒரு வஸ்துவுக்கு இன்னொரு அவஸ்தை ஏற்படுவதே உற்பத்தியாம். புதிதாக ஒரு பொருள் உண்டாவதென்பது கிடையாது; அப்படியே ஒரு பொருள் அடியோடு நசித்தொழிவதென்பதும் கிடையாது. ஓர் அவஸ்தையை விட்டு மற்றோரவஸ்தையை அடைவதே உற்பத்தி; அவ்வவஸ்தையையும்விட்டு மற்றோரவஸ்தையை யடைவதே விநாசம். மண் என்கிற ஒரு வஸ்துவானது முதலில் பிண்டத்வாவஸ்தையில் [உருண்டை வடிவமான நிலைமையில்] இருந்தது. அப்போது அந்த மண்ணானது ‘பிண்டம்’ அல்லது ‘ம்ருத்பிண்டம்’ என்ற பெயரால் வழங்கப்பட்டது. அந்த மண்தானே பெரிய வயிறும் கழுத்தும் வாயுமுடையதாய் வேறு நிலைமையில் மாறவே பானை குடம் சால் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது. பிண்டம் என்ற பெயரால் வழங்கப்பட்டபோது இருந்த மண்ணே பானையென்ற பெயரால் வழங்கப்படும்போதும் உளதேயன்றி வேறு வஸ்து யாதும் புதிதாக வுண்டாவதில்லை. பானையென வழங்கப்பட்ட அந்த மண்ணே உடைந்துபோய்ப் பொடியாய் சூர்ணமென்ற பெயரால் வழங்கப்படுகின்றது. இந்த நிலைமையிலும், பானையென வழங்கப்பட்ட மண்ணேதானுள்ளது; நிலைமை மாத்திரமே மாறுபடுகின்றது. ஆக, ஒரே மண்ணானது பல நிலைமைகளையடைகின்றதென்றும், பானையின் உற்பத்தியாவது பிண்டரூபமாயிருந்த மண்ணுக்கு வேறொரு நிலைமை யுண்டாவதுதானென்றும், அப்பானைக்கு நாசமாவது மண் பொடியான வொரு நிலைமையை யடைவதுதானென்றும் தெரிந்துகொண்டோமானோம். இது போலவே மற்றெல்லாக் காரியப் பொருள்களிலுங் காண்க.

ஸ்ருஷ்டிக்கு முன்பு பிரளய தசையிலும் சித்தும் அசித்துமுண்டு. இல்லாத பொருளுக்கு உற்பத்தி கிடையாதென்கிற கொள்கையின்படி ஸ்ருஷ்டிக்குப் பின்பு காணப்படுகின்ற சித்தும் அசித்தும் ஸ்ருஷ்டிக்கு முன்பும் இருந்திருக்கவேண்டியவைகளே. ஆனால், ஸ்ருஷ்டிக்குப் பின்பு இவை எத்தன்மையனவாய்க் காணப்படுகின்றனவோ அத்தன்மையனவாய் ஸ்ருஷ்டிக்கு முன்பு

இருப்பதுகிடையாது. அப்படி யிருந்திருந்தால் ஸ்ருஷ்டியென்று வ்யவஹரிக்க நியாயமில்லை. ஸ்ருஷ்டிக்குப் பின்பு காணப்படும் ஸ்தூலமான ரூபங்களும் நாமங்களும் ஸ்ருஷ்டிக்கு முன்பு இவற்றுக்கில்லை. ஸூக்ஷ்மமான உருவமும், பொதுவான ஒரே நாமமுந்தான் அத்தசையில் இவற்றுக்குண்டு. இதுவே காரண தசையாம். ஸ்ருஷ்டிக்குப் பின்பு உள்ள நிலம் நீர் தீ கால் விசும்பு முதலிய நாமங்களும், அத் தத்துவங்களுக்குள்ள ஸ்தூலமான ரூபங்களும் ஸ்ருஷ்டிக்கு முன்பு பிரகிருதிக்கு இல்லை. அதிஸூக்ஷ்மமான உருவமே யுண்டு. 'பிரகிருதி' என்கிற ஒரே பெயர்தான் வழங்கக் கூடியதாகும்.

அதுபோலவே ஜீவாத்மாக்களும் அக்காலத்தில் சரீரங்களோடும் இந்திரியங்களோடும் கூடியிராமல் ஞான விகாஸமற்று நுட்பமான நிலையில் இருக்கின்றார்கள். ஸ்ருஷ்டிக்குப் பின்பு சரீரங்களையும் இந்திரியங்களையும் பெற்று அவற்றின் மூலமாக ஞான விகாஸமும் சக்தியுமுடையவர்களாகிறார்கள். அங்கே, ப்ரக்ருதிக்கும் ஜீவாத்மாக்களுக்கும் ஸ்தூலமான ரூபங்களை யடைவதாகிற ஸ்தூலதசையே உத்பத்தியாகும். அத்தசைக்கு மாறுபட்ட ஸூக்ஷ்ம தசையை யடைவதே நாசமாகும். இப்படிப்பட்ட உத்பத்தி விநாசங்கள் பகவத்ஸங்கல்பத்தினாலேயே நடைபெற்று வருகின்றமையால் ஸ்ருஷ்டிக்கும் ஸம்ஹாரத்திற்கும் பகவானே காரணமென்னக் குறையில்லை.

ஜடப்பொருளான பிரகிருதிக்கு, தமஸ்ஸு என்றும் அவித்யையென்றும். மாயை யென்றும் பெயர் வழங்கி வருகின்றன. மஹாப்ரளய தசையில் இந்த ப்ரக்ருதியானது ஈச்வரனோடு ஒன்று சேர்ந்து நாமரூபவிபாகத்திற்கு அர்ஹமல்லாமல் அசித்தென்றுகூட அறியக்கூடாத நிலைமையிலிருக்கும். அப்பொழுது அதற்கு அவிபக்த தமஸ்ஸென்று பெயர். பிரகிருதியின் இயற்கைக் குணங்களான ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸு என்னுமிவை இத்தசையில் ஏற்றத் தாழ்வின்றி யிருக்கும். ஒரே அளவுள்ளன வாயிருக்கு மென்றபடி. ஆகையால், இத்தசையை 'குணத்ரயஸாம்யாவஸ்தை' என வழங்குவர் வேதாந்திகள். குணங்களில் ஏற்றத்தாழ்வு ஏற்படும்வரை ப்ரக்ருதியானது எவ்விதமான பரிணமத்தையுமடையாது. அசேதநமாகையால் சேதநனான ஈச்வரனுடைய பிரேரணையின்றியும் எவ்விதமான பரிணமத்தையும் அடையமுடியாது. ஆகையால் மஹாப்ரளய காலத்தில் மூல ப்ரக்ருதியானது பரிணமத்திற்கு அநுகூலமாக வல்லாமல் ஸ்திரமாயிருக்கும். ஸ்ருஷ்டிகாலம் வந்தபோது பிரகிருதியானது ஈச்வரனுடைய பிரேரணையினால் அவனிடத்திலிருந்து பிரிந்து நாம ரூப விபாகத்திற்கு அர்ஹமாகிப் பரிணமத்திற்கு அநுகூலமாய் அசித்தென்று அறியக்கூடியதான நிலைமையையடைகின்றது. அத்தசையில் அதற்கு விபக்ததமஸ்ஸென்று பெயருண்டாகிறது அதாவது பிரிந்து தனிப்பட்டு நிற்கும் தமஸ்ஸு என்றதாகிறது. இந்த நிலைமையை ஓர் அவஸ்தையென்று சொன்னாலும் பிரகிருதியின் ஸ்வரூபத்தில் எவ்விதமான மாறுபாடும் விளைவதில்லை. ஈச்வரனோடு ஒன்று சேர்ந்திருந்து தனிப்படக் காணமுடியா

திருந்த நிலைமைபோய், அவனின்றும் பிரிந்து தனிப்பட்டு அசித்தென்று காணக்கூடிய நிலைமைமாத்திரம் உண்டாகின்றது.

இந்நிலைமைகளை த்ருஷ்டாந்தமிட்டுக் காட்டவேணுமானால் அவிபக்த தமஸ்ஸை நீரில்கரைத்த உப்புக்கு உவமையாகக் கூறுவர். விபக்ததமஸ்ஸை ஸூரியகாந்தக் கல்லிலுள்ள நெருப்புக்கு ஒப்பாகச் சொல்லுவர். அவிபக்ததமஸ்ஸை உழுதுபண்படுத்திய நிலத்திலிட்ட விதைக்கொப்பாகவும், விபக்ததமஸ்ஸை மண்ணிவிருந்து வெளிக்கிளம்பி நிற்கும் விதைக்கொப்பாகவும் சொல்லுவதுண்டு. ஈச்வரனது பிரேரணையினால் ஸ்ருஷ்டிக்கு அபிமுகமாய் அசித்தென்றறியக் கூடிய நிலைமையில் நின்ற விபக்ததமஸ்ஸான பிரகிருதியானது அதன்பின்பு அக்ஷரமெனப்படுகிற அவஸ்தையை அடைகின்றது. இதை, உழுதுபண்படுத்திய நிலத்திலிடப்பட்டுத் தண்ணீர்கட்ட நன்றாய் நனைந்துமிருதுவான விதைக்கொப்பாகச்சொல்லுவர். இத்தசையிலும்குணங்கள்வைஷம்யத்தை யடைவதில்லை. இந்த நிலைமைக்கு அக்ஷரமென்றுபெயரிட்டதற்குக் காரணமென்னவெனில், அக்ஷரங்களான ஜீவராசிகள் பிரகிருதிக்குள் அடங்கியிருக்குமது காணக்கூடியதா யிருக்கையேயாம். விபக்ததமஸ்ஸூ அவிபக்த தமஸ்ஸூ என்கிற அவஸ்தைகளிலும் ஜீவராசிகள் பிரகிருதியில் அடங்கியிருந்தாலும் அப்பொழுது தனிப்படக் காணமுடியாமலிருக்கும். அக்ஷராவஸ்தையில் தனித் தனி காணக்கூடியதாயிருக்கும்.

ஒரு புஷ்பம் முதலில் அரும்பென்று சொல்லப்பட்டு, பிறகு மொக்கென்று சொல்லப்பட்டு, பின்னர் பூவென்று சொல்லப்படுகிறது. இங்கு தமஸ்ஸை அரும்பின் ஸ்தானத்திலும் அக்ஷரத்தை மொக்கின் ஸ்தானத்திலும் வைக்கலாம். அரும்பு மொக்கு பூ என்னுமிவை தனித்தனியான பொருள்களல்ல; எல்லாம் ஒன்றே. அது போலவே இங்கும் தமஸ்ஸூ அக்ஷரம் இவைகளும் தனித் தனி வஸ்துவல்ல; ஒன்றேயாம். நிலைமை மாத்திரம் சிறிது மாறுபடுகின்றது. அக்ஷரமென்னும் நிலைமைமாறி இன்னும் சிறிது விகாஸமடைந்தபோது பிரகிருதியானது அவிபக்த மென்னும் பெயரையடைகின்றது. இதை, தண்ணீரினால் நனைந்து சிறிது உப்பிப் பருத்த விதைக்கு ஒப்பாகச் சொல்லுவர். அவ்யக்தமென்றால் வ்யக்தமாகாத தென றவாறு. குணங்கள் ஸமமாக இருப்பதோ விஷமமாக (ஏற்றத்தாழ்வாக) இருப்பதோ எந்த நிலைமையில் வ்யக்தமாகவில்லையோ அது அவ்யக்தாவஸ்தையாம். விபக்ததமஸ்ஸூ, அக்ஷரம், அவ்யக்தம், என்கிற இம்மூன்று அவஸ்தைகளும் பிரகிருதியின் ஸ்தூலஸூக்ஷ்ம அவஸ்தைகளே யன்றி விலக்ஷணமான பரிணாமமல்ல; ஆனதுபற்றியே இவற்றிற்கு அரும்பு மொக்கு புஷ்பம் என்னும் நிலைமைகள் உவமை கூறப்பட்டன.

இந்த அவ்யக்தத்திலிருந்து ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள் ஏற்றத் தாழவடைய, 'மஹான்' என்கிற தத்துவமுண்டாகிறது. மூலப்ரக்ருதியிலும் ஸத்வ ரஜஸ் தமோகுணங்க ளிருந்தாலும் அவை ஏற்றத் தாழ்வின்றி ஸமமாயிருக்கையாலே அவற்றைத் தனித்தனி கண்டுபிடிக்கமுடியாது. 'மஹான்' என்கிற தத்துவம் முதல் இந்தக் குணங்கள் தமது காரியங்களைக்கொண்டு கண்டு

பிடிக்கக்கூடியனவாய் இருக்கும். குணவைஷம்யம் ஏற்பட்டு முதன்முதலாக வுண்டாகும் தத்துவம் மஹானே. இந்த மஹத் தத்வமானது ஸாத்விக மஹத்தென்றும் ராஜஸ மஹத்தென்றும் தாமஸ மஹத்தென்றும் மூன்றுவிதமாயிருக்கும். அவ்யக்தம் வரையிலுள்ள தத்துவங்களில் ஏற்படாத குணவைஷம்யம் இந்த மஹத்தத்வத்தில்தான் ஏற்படத் தொடங்கினது பற்றியே இந்த வேற்றுமையுண்டாயிற்று. இந்த மஹத்தத்வமே புத்தியை யுண்டாக்குவது.

"மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணு ராக்கை" என்றும், "மஞ்சு சேர்வானெரி நீர் நிலங்காலிவை மயங்கிநின்ற அஞ்சு சேராக்கை" என்றும் திருமங்கை யாழ்வார் கூறியபடி, நமது சரீரம் ஐந்து பூதங்களினால் ஆக்கப்பட்டது பற்றிப் பாஞ்ச பௌதிகம் என்னப்பட்டாலும் சரீர ஆரம்பகங்களான திரவியங்கள் எட்டு. அவையாவன, ஐந்து மஹாபூதங்களும் அவ்யக்தமும் மஹானும் அஹங்காரமும். சரீரத்தினுள் மஹத் தத்வம் சேர்ந்திருப்பதாலும் அது மூவகைப்பட்டிருப்பதாலும் நமது புத்தியும் ஸாத்விக புத்தி ராஜஸபுத்தி தாமஸபுத்தியென மூவகைப்பட்டிருக்கும். ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள், கார்ய அகார்யங்கள், பய அபயங்கள், பந்த மோக்ஷங்கள் என்னுமிவற்றை உள்ளபடி யறியும் நிச்சய ரூபமான புத்தியே ஸாத்விக புத்தியாம். ஒரு வஸ்துவிலுள்ள தருமங்களை மாறுபாடாக அறிதலாகிற அந்ய தாஜ்ஞானம் ராஜஸ புத்தியாம். ஒரு வஸ்துவை மற்றொருவஸ்துவாக அறிதலாகிற விபரீத ஞானம் தாமஸ புத்தியாம். இங்ஙனே மூன்றுவிதமான புத்திகளை மூன்று விதமான மஹத்தத்வம் உண்டாக்குகின்றது. மேன்மேலும் காரிய வர்க்கங்களின் உற்பத்தியடைவைக் கண்டும் கட்டுமுணர்க.

இங்கு மூலத்தில் [பாட்டில்] 'விண்முதல் முழுவதும்' என்றதில் 'விண்' என்பதற்கு உபநிஷத்தின் சாயையிலே மூலப்ரகிருதியென்று பொருள்கூறுவர்கள் பேராசிரியர்கள். அப்பொருள் தவிர விண்ணென்பதற்கு உலகப்பிரசித்தமான ஆகாசமென்னும் பொருளும் ஏற்கும். தைத்திரீய உபநிஷத்தில் "ஆகாசாத் வாயு: வாயோரக்நி:" என்று தொடங்கியுள்ள வாக்யராசியில் ஆகாசமடியாக ஸ்ருஷ்டிக்ரமம் சொல்லுகிற ஒரு புடையும் காண்பதனால் அதற்கிணங்க 'விண்முதல் முழுவதும்' எனலாகத் தட்டில்லை. இப்படிப்பட்ட பொருள்களுக்குச் சிறந்த காரணபூதன் பரம புருஷன் என்கிறது.

காரண மாகுந்தன்மையில் சிறப்பாவது யாதெனின், உலகத்தில் காரியப்பொருள்களுக்கு இன்றியமையாத உபாதான காரண - ஸஹகாரிகாரண - நிமித்த காரணங்களாகிற மூவகைக் காரணங்களும் வெவ்வேறு பட்டிருத்தல்போல, இங்கு [ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு] வெவ்வேறு பட்டிருக்கையன்றிக்கே தானொருவனேயாயிருக்கை. "முழுதும் வரன் முதலாய்" என்றும் "அவை முழுதுண்ட பரபரன்" என்றும் இங்கு ஆழ்வார் அருளிச்செய்திருக்கையாலே, பிற தெய்வங்களிடத்துக் காணப்படுகிற ஸ்ருஷ்டி சக்தியும் ஸம்ஹாரசக்தியும் ஏகதேசங்களுக்கே யென்பதும், அது

தானும் எம்பெருமான்றனது அநுப்ரவேசத்தினலாயது என்பதும் தெரிவிக்கப்பட்டனவாம். இனி பின்னடிகளினல் இது மூதலிக்கப்படுகின்றது.

"புரமொரு மூன்றெரித்து" என்பதனல் பரமபுருஷன்தானே முப்புரமெரித்ததாகக் கூறப்படுகிறது. சிவபிரானுடைய திருநாமங்களில் புரமெரித்தானென்றும், திரிபுரமெரித்தானென்றும் முப்புரமுளேயச் செய்தானென்றும் இங்ஙனே சில நாமங்கள் காணப்படுதலாலும், இவ்வாழ்வார்தாமே மேலே மூன்ரும்பத்தில் வாணனுயிரந் தோள் துணித்த கதையைக் கூறும் பாசுரத்தில் "திரிபுரஞ்செற்றவன்" என்னுஞ் சொல்லாலே சிவபெருமானேக் குறித்தலாலும் புரமெரித்த செயல் சிவபெருமானுடையதேயென்பது அறியக்கிடக்கின்றது; அப்படியிருக்க, இங்கு 'புரமொரு மூன்றெரித்து' என்று இச்செயலே விஷ்ணுவினுடையதாகச் சொல்லுவது என்னேவென்று ஆராயவேண்டும். பிரமாணங்களேக் கொண்டு ஆராய்ந்தால் இங்ஙனே உண்மை தெரியவருகிறது. மஹாபாரதத்தில் கர்ணபருவத்தில்

"விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்ய அமித தேஜஸ:,
தஸ்மாத் தநுர்ஜ்யா ஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர:"

என்று சொல்லிற்று. பரமசிவனுக்கு விஷ்ணு ஆத்மாவாயிருந்தமையால்தான் அச்சிவபிரான த்ரிபுரஸம்ஹாரத்தில் வில்நாணியைத் தொடவும் வல்லரானர்—என்பது மேற்குறித்த ச்லோகத்தின் கருத்து. இதனல், பரமசிவன் செய்ததாகச் சொல்லபபடுகிற த்ரிபுரஸம்ஹாரம் ஸ்ரீமஹாவிஷ்ணுசெய்வித்ததேயொழிய அவனதானே சுதந்திரமாகச் செய்ததன்று என்பது பெறப்பட்டது.

இதற்குமேல், 'அமரர்க்கு மறிவியந்து' என்றதன் கருத்தாவது: நானமுகன் தேவர்கட்கு ஞானமளித்ததாக ஒரு ப்ரஸித்தியுண்டு; அதனேயும் நிரூபித்துப் பார்க்குமளவில், ச்வேதாச்வதர உபநிஷத்தில் 'யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை' என்று எம்பெருமானே நான முகனேத் தனது திருநாபிக்கமலத்தில் தோற்றுவித்து அவனுக்கு வேதோபதேசமுகத்தால் ஞானமூமூட்டினதாக வோதிக்கிடக்கையாலே பிரமன் செய்ததாகச் சொல்லப்படுகிற ஞானதானமும் எம்பெருமானதினமேயென்பதாம். மஹாபாரதத்திற்கு உள்ளீடான மோக்ஷதர்மத்தில்,

"ஏதௌ த்வௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌ ஸ்ம்ருதௌ,
ததாதர்சிதபந்தாநௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரஹாரகௌ"

என்னப்பட்ட சுலோகத்தின் சாயையிலே இப்பாசுரம் அமைந்ததென்றுணர்க. பிரமன் சிவனுகிற இரண்டு தேவர்களும் முறையே எம்பெருமானுடைய அநுக்ரஹத்தில் நின்றும் சீற்றத்தில் நின்றும் தோன்றினவர்கள். அப்பெருமான் காட்டின வழியின்படியே ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் நடத்துகின்றவர்கள் என்பது மேற்குறித்த ச்லோத்தின் கருத்து. இப்பாசுரமுணர்த்துவதுமிதுவே.

(தொடரும்)

[ஸ்ரீ அ. ந. கிருஷ்ணராவ் இயற்றிய கன்னட நாவலின் சுருக்கம்: தொடர்ச்சி.]

ஸந்தியாராகம்

சுருக்கி மொழிபெயர்த்தவர்:

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

5

ராமசந்திரன் பஸ்ட்கிளாஸில் லோயர் செகன்டரீ பரீக்ஷை பாஸ்செய்துவிட்டான். மேல் படிப்புக்குத் தும்கூருக்கோ பெங்களூருக்கோ போகவேண்டும்; அவனுக்காக பெங்களூரில் ஒரு குடித்தனம் போடுவதென்று தீர்மானமாயிற்று; சாவித்திரி பிள்ளையைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாள்; ராயரால் சாவித்திரியை விட்டிருக்கவேமுடியாது. ஆகையால், எல்லோருமே போகவேண்டும். இதன் நடுவில் கௌரம்மாள் வெந்நீர் உள்ளிலிருந்து வரும்பொழுது கால் தடுக்கி விழவே, அதே சாக்கில் நோய் கண்டு இறந்துவிடவே, அவள்போன நக்ஷத்திரமும் நன்றாகவிருக்கவில்லையாதலால், ஹொஸஹள்ளி வீட்டைக் காலிபண்ண வேண்டிவந்தது. சாமண்ணா போய் பெங்களூரில் பசவன்குடியில் ராயருக்குத் தகுந்த பங்களா ஒன்றை வாடகைக்கு ஏற்பாடுசெய்துவிட்டு வந்தார். அது லால்பாகுக்கு அருகிலுமிருந்தது.

ராயருடைய ஜமீனைப் பயிரிடுபவர்களில் 30, 40 பெயர் ஹரிஜனங்களும் இருந்தார்கள். எல்லோரையுமே ராயர் ஒரேமாதிரி போஷித்து வந்தார். ராயர் குடும்பத்துடன் பெங்களூருக்குக் கிளம்பினநாள் ஹரிஜனங்கள் உள்பட ஊர் முழுவதுமே வருத்தத்துடன் அவர்களை வழியனுப்பக்கூடிவிட்டது. கிழவன் மரிகௌடன் (கவண்டன்) "சீக்கிரம் எங்களூருக்கு வந்துவிடுங்கள்" என்று நடுங்கிய வண்ணம் கூறினான். பறையன், கவண்டன் உள்பட எல்லோரும் மீனாக்ஷியம்மாளுக்கு சாஷ்டாங்கமாக தண்டனிட்டு வழியனுப்பினார்கள்.

மீனாக்ஷியம்மாளால் பேசமுடியவில்லை. கண்ணீர்த் திரை கண்களை மறைத்தது. கருணாதிருஷ்டியுடன் எல்லோரையும் ஒரு முறை பார்த்துவிட்டு பஸ் ஏறிஉட்கார்ந்தாள். பஸ் பெங்களூரை சமீபிக்கசமீபிக்க ராயரின் இதயம்பளுவாயிற்று. அவர் வாழ்நாளில் வெகுநாள்கள் வசுந்தராவின் சேவையில் கழித்திருந்தார். லக்ஷ்மணனின் மனதும் துயரச் சுமையைத் தாங்காமல் தவித்தது. பஸ் ஹனுமார் கோயிலை சமீபித்ததுமே 'ஓ'வென்று அழவாரம்பித்துவிட்டான். ஆனால், அவனுடைய துயரத்துடன்கூட ஒரு சமாதானமும் சேர்ந்தது. பெங்களூர் பெரிய நகரம். பெரியபெரிய வித்வான்கள் வசிக்கும் இடம். தான் சங்கீதம் பயில்வதற்கு அவகாசமுண்டு என்ற ஆசையில் தன் அன்பான ஹொசஹள்ளியை மறக்கத் தயாரானான். ஹொஸஹள்ளியைப் பிரிந்து செல்வதில் கொஞ்சமும் வருத்தப்படாதவன் ராமசந்திரன் ஒருவன்தான். அவனுக்குப் பட்டிக்காட்டு வாழ்க்கை அலுத்துப் போயிருந்தது.

பங்களாவின் சுற்றிலும் விசாலமான காம்பௌண்ட். தோட்டத்தின் மேல்பார்வையை ராயர் தன் பங்குக்கு வைத்துக் கொண்டார். லக்ஷ்மணன் அதில் பங்கெடுத்துக் கொண்டவன

தகப்பனுருக்கு ஓய்வு கொடுத்து முழுவேலையையும் தானே பார்த்துக்கொண்டான். ஹொஸஹள்ளியின் இயற்கை வனப்பு தன் கைத் தோட்டத்தில் வராவிட்டாலும் அற்பம் சொற்பமாவது அதன் நினைவை மூட்டிக்கொண்டிருந்த அந்தத் தோட்டத்தில் லக்ஷ்மணன் மெய்மறந்திருந்தான்.

ராமசந்திரன், சாந்தா, கோபால் இவர்கள் விஷயமாக ராயருக்கு ஆதங்கம் இருக்கவில்லை. லக்ஷ்மணன் விஷயத்தில் நாளுக்குநாள ஆதங்கம் அதிகரித்தது. அவன் தனக்குள்ளாகவே ஏதோ குறைப்பட்டுக்கொள்வதுபோல் தோன்றிற்று. விசாரித்துப்பார்த்ததில் தனக்குப் பள்ளிக்கூடம் போவதில் இஷ்டமில்லையென்றும், சங்கீதம் பயிலவேண்டுமென்று விருப்பம் என்றும் லக்ஷ்மணன் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டான். ராயருக்குக் கவலை அதிகரித்தது. தம் வம்சத்தில் யாரும் பாட்டுக்காரர்களாக இருக்கவில்லையே; இவன் இப்படிச் சொல்கிறுனே; என்ன செய்வது?... என்று யோசிக்கலானுர். செய்வதென்னவென்று அறியாமல் சாமண்ணுவிடம், "நீ என்ன சொல்கிறுயடா, சாமீ" என்று பிரஸ்தாபித்தார்.

"லக்ஷ்மணன் புத்திசாலி; ஆனுல், படிக்க இஷ்டமில்லை என்கிறுன். நானும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். அவன் அசையக்காணும். அவன் விருப்பம்போல் செய்வது நல்லது. தங்கள் சித்தம்"

"ஆமாம், இந்தப் பித்து அவனுக்கு எப்படிப் பிடித்ததோ தெரியவில்லை. அந்த முளபாகில் சென்னப்பாவின் வேலை இது என்று தோன்றுகிறது. எங்களகத்தில் யாரும் தாளம், தம்பூரா பிடித்தவர்கள் கிடையாது. இவன் தாஸையன் ஆகவேண்டும் என்று தலையில் எழுதி இருந்தால் யார்தான் என்ன செய்ய முடியும்? அவனுடைய பூர்வஜன்ம கர்மம்!" என்று ராயர் அலுத்துக்கொண்டார். வேறு வழி யொன்றும் தோன்றுமல் மகனை சங்கீதவித்வான் அனந்தாசாரியாரின் "கர்னுடக காயன சாலை"க்கு அனுப்பவாரம்பித்தார். அனந்தாசாரியார் சங்கீத வித்வத்துக்குப் பெயர்போன வம்சத்தில் சேர்ந்தவர். அவருடைய தந்தை வெங்கடேசாசார் புகழ்பெற்ற தக்ஷிணுதி வித்வானுன பூச்சி ஸ்ரீனிவாச ஐயங்காரின் சகபாடிகள். அனந்தாரியார் உடல்நோய் காரணமாகக் கச்சேரி செய்யப் போகமாட்டார். ஆனுல், அவரிடம் ஓரிரண்டு வருடம் பயின்றவர்கள்கூட எவ்வளவோ புகழ்பெற்ற வித்வான்களாக விளங்கினுர்கள். ஆசாரியார் சிஷ்யனைப் பரீக்ஷை செய்துபார்த்து அவனுடைய அபாரமான நாதசம்பத்தைக் கண்டு வியந்தார்.

"நீ பாடின கரஹரபிரியாவின் சஞ்சாரம் எங்கே கற்றுக் கொண்டாய் குழந்தை?"

லக்ஷ்மணன் முளபாகில் சென்னப்பாவின்வரலாற்றைச்சொன்ஞன். ஆசாரியார் சென்னப்பாவின் பெயரைக் கேட்டதுமே பக்தியுடன கண்ணை மூடிக்கொண்டு கைகூப்பினுர். "அவர் ஒரு அவதார புருஷர், அப்பனே! சாக்ஷாத் நாரதமுனிவரின் அவதாரம். சங்கீதத்தையே ஒரு யோகமாக அப்பியாசம் செய்திருக்கிறுர். பெரிய கடல்போல் விளங்குபவர்; நன்றுக யாராவது

பாடட்டும், யாராவது நன்றாக வாத்யம் வாசிக்கட்டும், எப்படியோ அங்கே வந்துவிடுவார். அவருக்கு மனது வந்தால் எப்படிப் பாடுவார் தெரியுமா! நீதான் கேட்டிருக்கிறாயே; மகானுபாவன்! நின்ற இடத்தில் நிற்கமாட்டார். ஒரு கச்சேரியா, பாடமா? அந்த பிரமேயமே வைத்துக்கொள்ளவில்லை. பறவை போன்ற சுபாவம். என் குரு—பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் ஒரு தடவை சென்னப்பாவின் சங்கீதத்தைக் கேட்டுவிட்டு, "வித்யை என்றால் உங்களுடைய வித்யைதான்! எங்களுடையது எல்லாம் என்ன, வீண் ஆடம்பரம்" என்றார். உனக்கு அவருடைய அனுக்கிரஹம் கிடைத்திருக்கு குழந்தை! அவர்தான் உன் குரு; நான் பெயருக்கு மாத்திரம் உன் குரு; அவ்வளவுதான்....உன்னைப் போன்ற பிறவிப் பாடகனுக்குச் சொல்லிக்கொடுப்பதே எனக்கொரு பெருமை" என்றார்.

"தாங்கள் இவ்வளவு பெரிய வார்த்தை சொல்லக்கூடாது சுவாமீ!" என்றான் லக்ஷ்மணன்.

6

ராமருக்கு அலுப்புக் குறைந்தது. அவருக்கு சினேகிதர்கள் அகப்பட்டார்கள். ஒருவர், வெகு நாள் ஜயபுர சமஸ்தானத்தில் காட்டு இலாகாவில் உத்தியோகம் புரிந்து ஓய்வு எடுத்துக்கொண்டு (Retired) சொந்த ஊரில் வந்து நிலைத்திருக்கும் பீமராவ். அவர் பிறவி மைசூரான். ஆனாலும், ஜயபுரத்து பீமராவ் என்ற பெயர் நிலைத்துவிட்டது. மற்றொருவர் தன் வக்கீல் தொழிலை மைந்தனுக்கு வகிக்க வைத்து ஓய்வுபெறும் சுந்தரராவ்.

இதன் நடுவில் சுந்தரராவின் வீட்டுக் குமாஸ்தாவின் தங்கை பிள்ளை வெங்கடேசன் மெட்ரிக்யுலேஷன் பரீக்ஷைக்குப் பணம் கட்டிவிட்டு இருக்க இடமின்றி, படிக்க வசதியின்றித் தவிப்பதைக் கண்டு, ராயர் அந்த ஏழைப் பையனுக்குத் தன் வீட்டில் இடம் தந்து ரக்ஷித்தார்.

வெங்கடேசன், ராயர் வீட்டில் புகுந்த சில நாட்களில் எல்லோருக்கும் வேண்டியவனானான். எல்லோருக்கும் ஒத்தாசையாக இருந்தான். எல்லோருடைய கஷ்டசுகங்களிலும் பங்கெடுத்துக் கொள்வான். ராயர் பையனின் குணத்தைக் கண்டு வியந்தார். சுந்தரராவிடம் மனமார வெங்கடேசனைப் புகழ்ந்தார்.

வெங்கடேசன் ராமுவின் சகபாடியானாலும் அவர்கள் இருவருக்கும் பொருந்தவில்லை. லக்ஷ்மணனிடம்தான் வெங்கடேசனுக்குப் பற்றுதல்; தனக்கு அவகாசம் கிடைத்தபொழுதெல்லாம் லக்ஷ்மணனுடன் கூடவே இருக்கவாரம்பித்தான். படிப்பு நேரத்தை ராமுவுடன் கழிக்கவேண்டியிருந்தது. அந்த வேளையிலும், மற்ற வேளைகளிலும் வெங்கடேசன் மூலம் ராமு தன் வேலைகள் அனைத்தையும் நிர்த்தாக்ஷிண்யமாகச் செய்விப்பான். வீட்டில் வேண்டிய ஆட்கள் இருந்தனர். ஆனாலுங்கூட, வேண்டுமென்றே ராமு வெங்கடேசனிடமே வேலை வாங்குவான். இவ்வாறு ராமுவுக்கு வெங்கடேசன் என்றால் வெகு அலக்ஷியம். வெங்கடேசனுக்குப் பாவம் இன்டர் பரீக்ஷை தேறவில்லை. ராமு பி. ஏ. பாஸ்செய்துவிடவே, மேல் படிப்பு எல். எல். பீ. படிப்பதற்குப் போய்விட்டான்.

சாந்தா கலியாணப்பருவமடையவே, மீனாக்ஷியம்மாள் கணவரிடம் வரன்தேடவேண்டுமென்று தூண்டினாள். பிறகு, தம்பதிகளிருவரும் ஒருமனதாகத் தம் அருமைப்புதல்வியை வெங்கடேசனுக்கே கன்னிகாதானம்செய்து கொடுப்பதென்று தீர்மானித்தனர். லக்ஷ்மணனுக்கும், வெங்கடேசனுக்கும் ரொம்ப ஆனந்தம். முகூர்த்தம் நிச்சயமானதும் "சாத்தியப்பட்டால் நாலுநாள் மட்டுமாவது கலியாணத்துக்கு வந்துவிட்டுப்போ" என்று ராயர் மகனுக்குப் பூனாவுக்குக் கடிதம் எழுதினார். தான் தற்சமயம் வரமுடியவில்லை என்று ராமு பதில் எழுதினதுடன், "இந்த சம்பந்தம் செய்யும் விஷயத்தில் என்னையும் ஒரு வார்த்தை கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்' என்று எழுதி இருந்தான். ராயர் சாவித்திரிக்கு இந்தக் கடிதத்தைக் காண்பித்து "நம் குழந்தைகள் நம் கஷ்ட சுகத்துக்கு உதவுவார்கள் என்று நினைக்கிறோம். அவாள் நம்மேல் குதிரை ஏறுகிறார்கள்!" என்று வருத்தப்பட்டார்.

லக்ஷ்மணனின் ஆனந்தத்துக்கு அளவே இல்லை. கலியாணமானால் சாந்தா யார் வீட்டுக்கோ போய்விடுவாளே...என்று எவ்வளவோ தடவை கவலைப்பட்டிருக்கிறான். இப்போது அது தப்பினதுமல்லாமல் அவள் மாலையிடுவது தன் உயிர்த்தோழன் வெங்கடேசனுக்கு!

கோபாலின் உத்ஸாகத்தைக் கேட்கவேண்டுமா? சாந்தாவை பரிகாசம் செய்வதில் முனைந்துவிட்டான். மீனாக்ஷியம்மாள் ஒரு தடவை, "ராமுவும் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவன் இல்லாதது வீடு விரிச்சென்று இருக்கு" என்றபொழுது, கோபால், "அவன் இல்லாதிருப்பதே நல்லது, சும்மா இருங்கள், பெரியம்மா. சந்தோஷ சமயத்தில் அவனுடையது ஏதாவது ராமாயணம் இருந்தே இருக்கும். யார் கண்ணிலிருந்தாவது ஜலம் வரவழைக்காவிட்டால் அவனுக்கு சமாதானம் ஏற்படாது" என்று கண்டிப்பாக உரைத்தான்.

கலியாணம் மிக விமரிசையாக நடந்தது. சுந்தரராவும் பீமராவும் காரியங்களைப் பங்கிட்டுக்கொண்டு உறவினர்களைவிட அதிக உத்ஸாகத்துடன் உழைத்தார்கள்.

சாயந்திரம் கலியாணப்பந்தலில் (Reception). வெங்கடேசனின் விருப்பப்படி லக்ஷ்மணனின் சங்கீதக்கச்சேரி; லக்ஷ்மணனின் சகபாடிகளே பக்கவாத்தியங்கள் வாசித்தார்கள். விருந்தினர் தாம்பூலம்பெற்றுக்கொண்டதும் சில வினாடிகளுக்குள் புறப்பட்டுப் போவது வழக்கமானாலும், ஒன்பது மணி விளக்கு சிமிட்டினாலும்* ஒருவரும் இடத்தைவிட்டு அசையவில்லை. வந்திருந்த விருந்தினர்கள் பாடினவர் ராயரின் இளையகுமாரன் என்று தெரிந்ததுமே வியப்புற்றனர். கச்சேரி முடிந்ததும் சுந்தரராவ் சந்தனம், புஷ்பமாலை, தாம்பூலங்களை வித்வான்களுக்கு வழங்கிவிட்டு, லக்ஷ்மணனுக்குத் தாமே மாலைபோட்டு, "லக்ஷ்மணா! அமோகமாகப் பாடினையப்பா! சாக்ஷாத் வித்யாசரசுவதியே உன்னிடம் அடைக்கலம் புகுந்திருந்தாள்! பகவான் உனக்கு இன்னும் வித்யை, ஆயுசு, ஐசுவரியம் எல்லாம் அருளட்டும், அப்பனே!" என்று ஆசிர்வதித்தார். (* பெங்களூர் வழக்கப்படி)

சாமண்ணு, 'புருகா' போட்ட தம்பூராவை சுந்தரராவிடம் கொடுத்தார். சுந்தரராவ் 'புருகா'வைக்களைந்துவிட்டுத் தம்பூரிக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, பூ சுற்றி, "இதற்கு உரிமையுள்ளவர் உன்னைத்தவிர வேறு யாருமில்லை, லக்ஷ்மணு! இப்பொழுது இது தன் யோக்கியதைக்கு ஏற்றவரின் வசம் சேருகிறது. எடுத்துக் கொள்" என்று கொடுத்தார்.

லக்ஷ்மணன் அதைக் கண்ணில் ஒத்திக்கொண்டு, தகப்பனுருக்கும், தாய்மார்களுக்கும் பணிந்துவிட்டு வந்து, சுந்தரராவுக்கும், சாமண்ணுவுக்கும், பீமராவுக்கும் நமஸ்காரம் செய்தான். வெங்கடேசன் அன்பாக மைத்துனனைத் தழுவிக்கொண்டான். அவன் இதயத்தில் பேசவேண்டியது ரொம்ப இருந்தது; ஆனால், வாய்மூலம் ஒன்றுவது கிளம்பவில்லை. சாந்தா தலைநிமிர்ந்து தமையனைப் பார்த்தாள். லக்ஷ்மணன் மெதுவாகத் தங்கையின் முகவாய்கட்டையைத் தடவ, அவன் கை கொஞ்சம் நனைந்தது!

கலியாணம் இனிதே முடிந்தது. மீனுக்ஷியம்மாளுக்குத் தோள் மீதிருந்து பெரிய சுமையொன்றைக் கீழே இறக்கிவைத்த மாதிரி ஆயிற்று. கலியாணம் முடிந்ததும் உடம்பில் கொஞ்சம் அலுப்புத் தட்டவாரம்பித்து தினந்தோறும் ஜுரம் வரவாரம்பித்தது. டாக்டர் பரிசைஷசெய்து பார்த்து, "இன்ப்ளுயென்ஸா; பயப்படக் காரணமில்லை" என்று தைரியம் சொல்லிவிட்டு, மருந்து கொடுத்தார். இரண்டு இஞ்சக்ஷன்களும் கொடுத்தார். ஜுரம் வருவது நின்றது. மீனுக்ஷியம்மாள் எழுந்து நடமாடும்படி ஆனாலுங்கூட 'திடீர்திடீர்' என்று மார்வலி தோன்றும். "அவருக்கு ரொம்ப ஓய்வு வேண்டும். மனதுக்கு அதிர்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று டாக்டர் எச்சரித்தார்.

7

ராமு பூனாவிலிருந்து வரும்பொழுதே அருவருப்புடன் வந்தான். வெங்கடேனுக்கு சாந்தாவைக் கொடுத்தது அவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. தற்சமயம், வெங்கடேசன், வீட்டுமாப்பிள்ளையாகிவிட்டிருந்தான். முன்னைப்போல், சேவகன் ரங்கனிலிருந்து ராயர் வரையிலும் எல்லோரும் அதிகாரம் செய்யும்படி இருக்கவில்லை. வெங்கடேசனுக்குத்தான் எல்லாவற்றிலும் முதல் ஸ்தானம்.

இதைக் கண்டு ராமுவுக்கு ரோசம் பொத்துக்கொண்டது. கலியாணத்தில் லக்ஷ்மணன் நடத்திய கச்சேரியைப்பற்றிய புகழ் மொழியைக்கேட்க அவனுடைய பொருமை மேலும் அதிகரித்தது. தான் அடுத்த வருஷம் M. A., L. L. B. பட்டதாரியாகப்போகிறுன். தனக்கில்லாத மரியாதை இதுகள் இரண்டுக்கும் கிடைக்கிறதே...என்ற அருவருப்பை நூறுவிதங்களில் காட்டிக்கொண்டான்.... இலையில் பரிமாறி இருக்கும்; எல்லோரும் சாப்பிடக் காத்துக்கொண்டிருப்பார்கள்; இவன் தன்னறையில் மூஞ்சியைத் தூக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பான்! ராயரே எழுந்துபோய் மகனை உபசாரம் செய்து அழைத்துவந்து இலை முன்னால் உட்கார்த்தவேண்டும். கொஞ்சமாகப் பரிமாறினாலோ, "பாதிவயிற்றுக்குப் போட்டு சாக அடிக்கிறீர்கள்" என்பான்! நாலு பருக்கை

அதிகம் விழுந்தால், "குண்டோதரனுக்குப் படைப்பதுபோல் தள்ளுகிறாயே" என்பான்!...

மீனாக்ஷியம்மாளுக்கு இதயரோகம் அதிகரிக்கவே, ராம-லக்ஷ்மணனுக்குக் கலியாணம் செய்து பார்க்கவேண்டுமென்று அவசரப்பட்டாள்; சாந்தாவுக்கு வரன் தேடின உத்ஸாகத்தைவிடப் பதின்மடங்கு அதிக உத்ஸாகத்துடன் பெண் பார்க்கும் படலம் நடந்தது. பார்த்த பெண்களுக்கெல்லாம் ராமு ஒவ்வொரு குறைகூறி மறுத்துவந்தான்; சாவித்திரியம்மா அலுத்துப்போனாள். "நீ இப்படியே ஏதாவது குறை சொல்லிண்டு வா, ராமு!...கடைசியில் ஒரு பெண்ணும் கிடைக்காது கலியாணமே ஆகாது."

"ஆகாவிட்டால், விட்டது கவலை. இந்தக் காலத்தில் பெண்களுக்கென்ன குறைவு...நாய்க்குடையாட்டமா?"

"இந்த மாதிரி பேசப்படாது அப்பனே!..,சாயந்திரம் சிக்கமகளூர் ஹிரண்யப்பா தன் பெண்ணை அழைச்சுண்டு வருகிறார். எங்கேயாவது போய்விடாதே; பார்த்த பெயர் 'பெண் நன்றாக இருக்கு' என்கிறார்கள். ஒத்துக்கொண்டுவிடு. அவர் பெரிய பணக்காரர். லக்ஷாதிபதி. பெரிய காப்பி பிளாண்டர். கவலைப்படாதே" என்று சாவித்திரியம்மாள் மைந்தனுக்குப் புத்திமதி சொன்னார்.

ராமு பெண்ணைப் பார்த்தான்; ஒத்துக்கொண்டான். கலியாணம் விமரிசையாக நடந்தது. அந்தக் கலியாணத்திலேயே லக்ஷ்மணனின் கலியாணமும் நிச்சயமாகிவிட்டது. ராமுவின் மாமனாரின் சமீப உறவினரான வெங்கடசுப்பய்யாவின் புதல்வி சௌ. ஜயலக்ஷ்மியைத்தான் லக்ஷ்மணனுக்கு நிச்சயமாயிற்று. வெங்கடசுப்பைய்யா பெங்களூரில் பாங்க் ஒன்றில் கேஷிய (Cashier) ராக இருந்தார். லக்ஷ்மணனின் இஷ்டப்படியே ஆடம்பரமின்றி ஒரேநாள் கலியாணம் நடத்தினார்.

ஒருநாள் கோபாலன் தனிமையில் ஏதோ எழுதுவதைக் கண்ட லக்ஷ்மணன் என்னவென்று கேட்டான். கோபால் சங்கோசத்துடன் தான் கதையொன்று எழுதி இருப்பதாக அமரிக்கையாகப் பகர்ந்து, அதைத் தமயனுக்கு வாசித்துக் காண்பித்தான். கதை ஒரு கலைஞனின் (சிற்பியின்) வாழ்க்கை பற்றியது. மிகவும் உருக்கமான வாழ்க்கைச் சித்திரம்.

"இதைப் படிப்பதற்கு சங்கோசமேன்?"

"உனக்குப் பிடித்ததா லச்சண்ணா?"

"எவ்வளவு உயர்ந்த கருத்துப்பா, உன்னுடையது! கோபூ! உனக்குக் கடிதமும் இங்கியும் சாதனம்; எனக்குச் சரிகமபதநிஸ சாதனம்...உன்னுடைய கதையைப் படித்தால் மனதுக்கு அமைதி உண்டாகிறது. எல்லோரும் சில்லரை விஷயங்களையே சதா யோசிக்கையில் யாராவது பெரிய விஷயத்தைப்பற்றி எடுத்தால் இருட்டில் மினிமினிப் பூச்சி பறப்பதுபோலிருக்கு.

"இதைவிட எனக்குப் பெரிய பாக்கியம் வேண்டுமா லச்சண்ணா!

அன்றிலிருந்து கோபாலின் எழுதுகோலுக்குப் புத்துயிர் உண்டாயிற்று. அவன் உள்ளம் செழிப்பான நிலம்போலிருந்தது; இப்பொழுது அதன்மேல் நன்றாக மழை பெய்தமாதிரியாயிற்று.

(தொடரும்)

உதிர்ந்த மலர்கள்.

வை. மு. கோ.

"பூஷணிக்காய் உருள்வது கண்ணுக்குத்தெரியாது; கடுகுக்குக் கணக்குப் பார்ப்பது" என்பது பழமொழி. உத்தமத் திருப்பணிக்கு உதவ யோசனை; மனம் வருவதில்லை. உதவாக்கரை சினிமாவுக்குக் கொட்டிவிடத் துடிதுடிப்பு! பாபத்தைத் தெரிந்தும் செய்யப் பறப்பதும் புண்ணியத்தைச் செய்ய வழியே தெரியாமலிருப்பதும் உலக இயல்பாகிவிட்டதல்லவா?

"சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது என்பது பழமொழி. சாண் ஏறுமலேயே முழம்—மைல்—சறுக்கிவிடும்போது அதையும் இதே உள்ளம் சமாளித்துத் தாக்குப்பிடிக்கிறது. சறுக்காமலிருக்கும் சக்தியைப் பெறத்தான் தெரியவில்லை. காரணம் பக்தியற்ற நிலைதான்!

வாஸனை மூலமாகவே பலபொருள்களைக் கண்ணால் பார்க்காமல் அறிகிறோம். கண்ணால் பார்த்தும் சிலவற்றை மதிப்பதில்லை. அதுபோல் கண்ணால் பார்க்காமலேயே கீர்த்திச் சிகரத்தில் ஆரோகணிக்கும் மகான்களை—சீலர்களை—அவர்களது ஸேவைகளின் மூலம் பார்க்கிறோம். கண்ணால் பார்த்தும் பலரைப் பார்த்ததாகவே உணர்வதில்லை. இதைப்பற்றித்தான் "செத்தும் பிழைத்த புனிதர்கள், சாகாமலேயே செத்த கயவர்கள்" என்பது பழமொழியாயிற்று.

சிலருடைய தரித்திர ஜாதகத்தின் போக்கு திகைப்புறச் செய்கிறது. சுக்ரதசைகூட அவர்களுக்கு வக்ரதசையாகி வீணாகிவிடுகிறது என்றால், மற்றப்படிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது? இத்தகையோருக்கு அகம்பாவத்தில் மட்டும் குறைவேஇல்லை! அதைவிட்டு பகவானிடம் பற்றுக்கொண்டால் க்ரகபலம் என்ன செய்யும்? கடவுளின் அநுக்ரகபலம் காப்பாற்றாதா?

எதிர்பார்க்கும் காரியம் சிலது நடப்பதே இல்லை. எதிர்பாராத காரியம் நடந்துவிடுகிறது. இது சிலசமயம் கொண்டாடும்படி அமைகிறது. சில சமயம் சங்கடத்தில் முடிகிறது. இதுதான் தெய்வ சங்கல்பம் என்றாகிறது.

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்."

பேசத்தெரியாதவர்கள் சமயாசமயம், சந்தர்ப்பம் எதுவும் பாராமல் "தக்கபுக்க" என்று பேசிப் பரிகாஸத்திற்கும் கோபத்திற்கும் ஆளாகிறார்கள். நன்றாகப் பேசத்தெரிந்தவர்களோ ஆழம்பார்க்கிறதுபோல் பேசாமல் இருந்து தக்க சமயத்தில் ஒரு வார்த்தை முத்து உதிர்ப்பதுபோல் உதிர்க்கிறார்கள்! அந்த ஒரு வார்த்தையினால் அபாரமான புகழையும் அடைகிறார்கள்!

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

"ஏமாற்றம்"

"இன்று என் கணவரின் உத்ஸாகத்திற்கும் பூரிப்பிற்கும் எல்லையே இல்லை. காரணம்... ஆதியில் அவருடன் கூடப் படித்த சினேகிதர் வெகு வருஷங்களுக்குப் பிறகு ஏதோ உத்யோக நிமித்தமாக இந்த ஊருக்கு வரப்போகிறார்; அதுவும் எங்கள் வீட்டிலேயே வந்து இறங்கப்போகிறார், அதனால், அவருக்குக் கும்மாளம்!...எனக்கு வேலை நரம்பு உடைந்துவிடுகிறது!...... அவருக்கு அந்த சமயல் பிடிக்கும்; இந்த பக்ஷணம் பிடிக்கும், அதைப் பண்ணு; இதைப் பண்ணு...என்று ப்ரமாத திட்டம் போடுகிறார். இன்னும் ஒரு வாரமோ, பத்து நாளோ...எனக்கு ஓய்வே கிடைக்காது, காந்தா; நான் பிறகு வருகிறேன். நீங்கள் எல்லோரும் கிளப்பின் காரியத்தை நடத்துங்கள்" என்று பெருமையுடன் கூறினாள்.

காந்தா:—அப்படியானால் ஒரு வாரம் கழித்து உங்களைப் பார்க்கலாம் என்று சொல்லுங்கள்......ஆமாம்! வரப்போகும் விருந்தாளி பெரிய உத்யோகஸ்தர் என்கிறீர்களே! அவரையே நம் கிளப்பிற்கு ஒரு நாள் அழைத்து நமது நடவடிக்கைகளைக் காட்டினால் நல்லதல்லவா? ஏதோ சிறு தொகையாவது நன்கொடை கொடுப்பாரல்லவா? ஏதோ இன்றே கமிட்டியில் தீர்மானித்து அழைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம், லோகா!

லோகாவும் ஆமோதித்தாள். ஆயிரத்துக்கு மேல்பட்ட ரூபாய் சம்பளம் வாங்கும் பெரிய மனிதர் கிளப்புகளைப் பார்க்க வேண்டியதுதானே! அவருடன் அவர் மனைவியும் வந்தால் ஜோடியாக அழைக்கலாம்...என்று தனக்குள் எண்ணினாள். பலகார தினுசுகளின் மணமும், சமயலின், வாசனையும் அக்கம் பக்கம் உள்ளவர்களின் மூக்கைத் துளைத்துவிட்டது. இத்தனை பெரிய உத்யோகஸ்தர், தடபுடல் நாகரீகத்தில் இருப்பார்; மேஜை போஜனம் செய்வார். சதா கால் சட்டையுடன்தான் உலாவுவார். ஆங்கிலமேதான் பேசுவார். புகை குடிப்பதைத்தவிர வேறு இருக்காது. தலை கிராப்பும் காலி நெற்றியுமாக இருப்பார்...என்றெல்லாம் தம்பதிகள் தீர்மானித்து அதற்கான முறையில் சிகரேட் பெட்டிமுதல் வாங்கிவைத்திருந்தனர்.

ரயிலிலிருந்து இறங்கும்போது கோபாலனுக்கு அடையாளமே தெரியாமல் விழித்தவாறு முதல் வகுப்பு வண்டியையும் இரண்டாம்வகுப்பு வண்டியையும் சுற்றிப்பார்த்து ஏமாந்துநிற்கும்போது, "டேய், கோபூ! ஏய், பழி! இன்னும் யாருடா வருகிறார்கள்? யாரைப் பார்க்கிறாய்?" என்று பட்டையாய் திருமண்காப்பும் குடுமிமுடிச்சும் பஞ்சகச்ச வேஷ்டியுமாய்க் கூப்பிடும் குரலைக் கேட்டுத் திரும்பிப்பார்த்த கோபு வியப்புடன் துள்ளிநின்றான்! "டேய், கோவிந்தராஜனாடா நீ? அடப் பாவி! உன்னைப்பற்றி நான் அஸல் வெள்ளைக்கார ரீதியிலல்லவா மனக்கோட்டை கட்டித் திட்டம் போட்டுவிட்டேன். இதென்னடா ப்ராம்மணார்த்தப் பேர் வழியாயிருக்கிறாய்? உனக்காடா ஆயிரம் ரூபாய் சம்பளம்? அட

மடிசஞ்சி! நீ எப்படி தடபுலாக வருவாயோ என்றெண்ணி நான் புல்ஸூட்டை உனக்காகத் தைத்து இன்றுதாண்டா போட்டுக் கொண்டு வந்தேன்...சரி! சரி!! உன் மனைவி வரவில்லையா?'' என்ருன்.

இதற்குள் சாமான்களை எல்லாம் போர்ட்டர் இறக்கினுன். கோவிந்தராஜன் ப்ரமாதமாய்ச் சிரித்துவிட்டு, "முட்டாள்களிலும் அடிமுட்டாள் நீதாண்டா! காலேஜியில் நாம் படிக்கும்போது என் தலையைத் தடவித்தடவி 'குடுமி ஆசாமி' என்று மாணவர்கள் பரிகஸித்த காலத்திலேயே நான் லக்ஷ்யம் செய்யவில்லையே! இப்போது சுதந்திரமாக உத்யோகத்திலிருக்கும்போது எதற்காக நமது நாட்டுப் பெருமையைக் குலைத்துக்கொண்டு பிறரைப் பின் பற்றவேணும்? வெள்ளைக்காரன் இந்தியாவில் இருக்கையில் இந்தியர்களைப்போலவா வாழுகிருன்! வேஷமாபோடுகிருன்? தன் தாய்நாட்டின் பெருமைக்கு அவன் கொடுக்கும் மரியாதையை நாம்பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டாமாடா, முட்டாள்!...என் மனைவி வரவில்லை. வா போகலாம்'' என்று கூறிக் கிளம்பினுர்கள்.

லோகா இந்தத் தடபுடல் நாகரீகப்பேர்வழிக்காகத் தானும் ஜாதிக்கட்டைவிட்டு முன் குசவான்வைத்த மாம்பழக் கட்டுகட்டிக் கொண்டு நெற்றியில் கொசுவைப்போல் சிறியபொட்டு இட்டுக் கொண்டு மூக்குத்தியைக் கழற்றிவிட்டு அஸல் நாகரீக நங்கையைப்போல் நகங்களுக்குக் கலர்தீட்டி உதட்டிற்குக் காவியடித்துத் தலையில் பெரிய கொண்டையணிந்து தடபுடலாகக் காட்சியளித்து நின்ருள்!

கம்பீரமாய் டாக்ஸியில் வந்திறங்கிய தன் கணவரின் புதிய நிஜார் சொக்காயின் காட்சி அவளுக்கு வெகு இனியதாக இருந்த தால் கண்ணிமைக்காமல் அவரையே பார்த்து ப்ரமித்தாள். கூடவே இவரைவிட தடபுடல் பேர்வழியாகச் சிநேகிதன் வருவான் என்று எண்ணிப்பார்க்கும்போது அஸல் ப்ராம்மணுர்த்த ஸ்வாமிகள்போல் ஒருவர் இறங்குவதைக் கண்டு தூக்கிவாரிப் போட்டு நின்ருள்!

...இந்த மனிதனு உயர்ந்த உத்யோகஸ்தன்? சே! சே! இருக்காது! இவன் சமயல்காரனே, குமாஸ்தாவோ ஆக இருக்கலாம். அவரும் அவருடைய மனைவியும் வேறு காரில் வரக்கூடும் ...என்று தனக்குள் எண்ணியபடி தன் கணவரிடம் ஜாடை காட்டிக் கேட்டாள்.

இதையறிந்த கோபு, "லோகா! இதோ இவன்தான் என் ஆப்த நண்பன் கோவிந்தராஜன். நான் ரயிலடியில் ப்ரமித்தது போல் நீயும் ப்ரமிக்கிருய்!...இவன் அப்படி இருப்பான், இப்படி இருப்பான்...என்று நாம் உலகத்தில் பலரையும் பார்க்கும் கண்களுடன் இவனைப்பற்றியும் மனக்கோட்டை கட்டி ஏமாற்றமடைந்தோம். இவன் மனைவி செங்கமலவல்லி வரவில்லையாம். நாம்தான் வேஷக்காரர்களாகிவிட்டோம்'' என்ருன்.

லோகாவுக்குச் சப்பிட்டுவிட்டது!...க்ளப்பில் வரவேற்க ஏற்பாடு செய்துவிட்டிருக்கப்போகிருர்களே! இந்தப் பித்துக்குளி

கட்டுப்பெட்டியைப் பார்த்தால் நகைப்பார்கள்...என்று தோன்றி விட்டது. நண்பன் வருவதற்கு முன்பு இருந்த பரபரப்பும் ஆவலும் க்ஷணத்திற்குள் சுருங்கிவிட்டது!...

முன்பு வந்துசென்ற சினேகிதை உடனே க்ளப்புத் தலைவி வீட்டிற்குச் சென்று அவஸரமாகக் கூட்டங்கூட்டி இந்தப் பெரிய உத்யோகஸ்தரை அழைக்க இன்றே போகவேண்டுமென்று இரவு சுமார் 7 மணிக்கே தலைவி, இரு காரியதரிசிகள் ஆக மூவரும் ப்ரமாத அலங்காரத்துடன் நாகரீக தேவதைகளாய் தஸ்புஸ் என்று இங்கிலீஷில் பேசிப் பொரிந்தபடியே, குதிகால் தூக்கலான ஜோடுகளுடன் தத்தித் தடுமாறி நடந்துவந்தார்கள்.

கூடத்து ஹாலில் பட்டை நாமமும் பஞ்சகச்ச வேஷ்டியும் குடுமி முடுச்சுமாக உட்கார்ந்திருக்கும் பேர்வழியைப் பார்த்து, இவர் யாரோ என்று எண்ணி, லோகாவின் கணவரைக் கண்டு, "இன்னும் உங்கள் சினேகிதர் வரவில்லையா? ரெயில் லேட்டா? அவரைப் பார்க்கத்தான் நாங்கள் வந்தோம். நாங்கள் நவ நாகரீக க்ளப்பைச் சேர்ந்தவர்கள்" என்று ஆங்கிலத்திலேயே பேசியதைக் கேட்டு உத்யோகஸ்தர் உதட்டைப் பிதுக்கினார்.

கோபு திடுக்கிட்டு நடுங்கினான். அசடுவழிய பல்லை இளித்துக்கொண்டு, "ஹி! ஹி! ஹி!! இவர்தான் என் சினேகிதர் கோவிந்தராஜன்; "S. G. ராஜ்" என்ற குறுகிய பெயரை உடையவர்...என்று முடிப்பதற்குள் வந்த நங்கைகள் வியப்புக்கடலாடி விலுவிலுத்துப்போனார்கள். பேசவும் தெரியவில்லை.

இந்த நாகரீக அலங்காரப் பொம்மைகளைக் கண்ட ராஜன் ப்ரமாதமாய் நகைத்ததோடு, "தாய்மார்களே! க்ளப்பின் பெருமையைக்கொண்டு நமது பண்டைய காலத்திய பழக்கவழக்கங்களையும் கலாச்சாரப் பண்பாடுகளையும் கொலை செய்யாமல் நாட்டின் நாகரீகத்தை வளர்க்கும் முறையில் நாரீமணிகளாகிய நீங்கள் பாடுபட்டால் மிகமிக சந்தோஷமாயிருக்கும். பாரதநாடும் பழம்பெருமையை அடையும்" என்று ஒரு குட்டி ப்ரஸங்கத்தைச் செய்துவிட்டு, இவர்கள் ப்ரமிக்கும்படி 500 ரூபாய்க்கு ஒரு செக்கு எழுதி, "சங்கத்தின் கலாசார வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள்" என்று கூறிக்கொடுத்தார். என்ன ஏமாற்றம்! டாக்குடீக்கு நாகரீகப் பேர்வழிகள் பலரைப் பார்த்து ஒரு காலணா பெயராமல் எத்தனையோ இடங்களில் திரும்பிப்போயுள்ள இவர்களுக்கு இந்த மனிதனின் தோற்றமும் செய்கையும் மகத்தான வியப்பைக் கொடுத்தது!

பக்தன்.

தெய்வீக மாதப் பத்திரிகை.

தனி ப்ரதி அணா 5.

வருடச் சந்தா ரூ.3, நன்கொடைச் சந்தா ரூ.10.

[மார்கழி இதழ் திருப்பாவைமலராக வெளிவருகிறது: விலை, அணா 8.]

காவிதாசர் கனவு

6. ருது ரங்கம்: இளவேனிற்காலம்.

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சிவந்த தளிர்களுடனும் மணம் நிறைந்த மலர்களுடனும் விளங்கும் மரங்கள் காற்றில் அழகாக அசைந்துஅசைந்து இளம் பெண்களின் மனத்தில் காமத்தை எழச் செய்கின்றது. பவளம் போன்ற சிவந்தமலர்களுடன் விளங்கும் அசோகமரம் சோகத்தை யுவர்களுக்குக் கொடுக்கின்றது. வண்டுகள் மொய்க்கும் மலர்களுடனும் காற்றில் அசையும் தளிர்களுடனும் கூடிய மாமரத்தின் மொட்டுகள் யுவர்கள் மனத்தில் காமத்தை எழுப்புகின்றது. காதலியின் முகம்போல் விளங்கும் குரவக (மருதாணி) மலர்க் கொத்தைக் கண்ட எந்த மனிதனுடைய மனதுதான் மன்மத பாணங்களால் துயரப்படாமல் இருக்கும்? மலர்ந்த கிம்சுக மரங்கள் நெருப்புப்போல் சிவந்திருப்பதால் அவைகள் இருக்கும் பூமி சிவப்பாடை யுடுத்திய பெண்ணைப்போல் விளங்குகின்றது. கிளிமூக்குகள் போன்ற கிம்சுக மலர்களும் கர்ணிகார மலர்களுமே யுவர்களுடைய மனதைப் புண்படுத்தியிருக்க, இந்தக் குயில்களின் இனிய கூவுதல் எதற்கு? குயில்களின் இனிமையான கூவுதல்களாலும் வண்டுகளின் மோகனமான ரீங்காரங்களாலும் நாணம் நிறைந்த குலமகளிர் மனங்கூட கலக்கமடைகின்றது. மலர்ந்த மாமரக் கிளைகளை அசைவித்து, குயில்களின் கூவுதல்களை அதிகப்படுத்தி, மனதைக் கவர்ந்து, பனி நீங்கியதால் உடலுக்கு இன்பத்தை அளிக்கும் வசந்த காலக் காற்று எல்லா மனங்களையும் கொள்ளை கொள்ளுகின்றது.

ஆகம்பயன் குஸுமிதா: ஸஹகாரசாகா:
விஸ்தாரயன் பரப்ருதஸ்ய வசாம்ஸி திக்ஷு |
வாயுர்விவாதி ஹ்ருதயானிஹரன் னராணாம்
நீஹாரபாத விகமாத் ஸுபகோ வஸந்தே ||

பெண்கள் புன்முறுவல்போல் அழகிய வெண்மை நிறம் உள்ள குமுத மலர்கள் நிறைந்த தோட்டங்கள் ஆசையற்ற ஆண்டிகளின் மனதைக்கூட மாற்றிவிடும். அப்படி இருக்க, காமம் நிறைந்த யுவர்களுடைய நிலை என்ன? ஒட்டியாணங்கள் பூண்ட இடையுடனும் ஆரங்களால் விளங்கும் தனங்களுடனும் விளங்கும் காமமுள்ள பெண்மணிகள் வசந்த காலத்தில் வண்டுகளின் ரீங்காரங்களைக் கொண்டு யுவர்களுடைய மனதைக் கொள்ளை கொண்டு போய்விடுகின்றார்கள். மலர்ந்த பூக்களால் விளங்கும் மரங்களுடன் கூடியதும் குயில் கூவும் தாழ்வரைகள் உள்ளதுமான மலைகளைக் கண்டும் யாவரும் ஆனந்தமடைகின்றார்கள். காதலியைப் பிரிந்த காதலன் மலர்நிறைந்த மாமரத்தைக் கண்டு வருந்தி கண்களை மூடிக்கொண்டு கலங்குகின்றான். நறுமணம் ஏறுமல்

மூக்கை அடைத்துக்கொள்கின்றான். சோகமுற்று தவிக்கின்றான். இரைந்து அழுகின்றான். மாமலர்களை அம்புகளாகவும் கிம்சுக மரத்தை வில்லாகவும், வண்டுக்கூட்டத்தை நாணாகவும், நிர்மலமான சந்திரனை வெண்குடையாகவும், தென்றல் காற்றைப் பட்டயானைவாகனமாகவும், வண்டுகளைப் புகழுரையாளர்களாகவும் கொண்டு உலகம் முழுவதையும் வென்ற மன்மத அரசன் வசந்தனுடன் வந்து உங்களுக்கு எல்லா சிறந்த இன்பங்களையும் அளிக்கட்டும்.

ஆம்ரீ மஞ்சுள வாசர:
ஸத்கிம்சுகம்யத் துனு:
ஜ்யாயஸ்யாளி குலம்களங்கரஹிதம்
சத்ரம் ஸிதாம்சு: ஸிதம்
மத்தேபோமலயானில: பரப்ருதோ
யத்வந்திநோ லோகஜித்
ஸோயம் வோ விதரீதரீது விதனுர்
பத்ரம் வஸந்தான்வித:

இப்படி மிக உற்சாகத்துடன் அவர் தன் இளமையில் செய்த ஆறு ருதுக்கள் வர்ணனையை காளிதாசர் மீண்டும் கூறும்பொழுது அவருடைய வசீகரமான கண்களில் இளமை ஒளி மிளிர்ந்தது. முதுமைப் பருவத்தில் உள்ளவர்போலவாவது, இறக்கும் தருவாயில் இருப்பவர் போலவாவது தோன்றவே இல்லை.

முடிவில் அவர் கூறினார்: "எவ்வளவு அழகு நிறைந்த பாரத நாடு! ஆறு ருதுக்களும் சக்கிரம்போல் சுழன்று வந்து உலகத்தில் வேறு எங்கும் காணாத எழிலையும் இன்பத்தையும் நம்முடைய தாய் நாட்டுக்கு அளிக்கின்றன. என் அம்மை பராசக்தி தவமிருக்கும் நன்னாடு! மீண்டும் பிறக்க வேண்டுமானால் இந்நாட்டிலேயே பிறக்கவேண்டும் என்று என் பேராசை. இந்தப் பொன்னாட்டில் சந்திர கலா தேவியுடன் வாழ்வதைவிடச் சிறந்த இன்பம் உண்டா? ஆனால் நாங்கள் இருவரும் தேவியின் பொன்னுலகம் சென்று அவளுடைய பொன்னடிகளை அடையவேண்டாமா? அவளுடைய திருவுள்ளப்படி நடக்கட்டும்" (தொடரும்)

யோகி சுத்தானந்தபாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்
டி பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே

நினைப்பதொன்று நடப்பதொன்று

என்னைக் கல்யாணச் சந்தையில் எங்கப்பா ஏலம்போட நல்ல நாள் பார்த்து ஆரம்பித்துவிட்டார்!...என் துரத்ருஷ்ட வசம் என் தாயார் நான் பீ. ஏ. படிக்கும் போதே உலகத்தைவிட்டுப் போய்விட்டாள். என்னுடைய சகல விஷயத்திலும் பொறுப்பாளியும் ஏக சக்ராதிபதியுமானவர் என் பிதாதான். அவருக்கும் எனக்கும் 20 வயதுதான் வித்யாஸம். அந்தக் காலத்துக் கல்யாணம். பழக்க வழக்கப்படி எங்கப்பாவுக்கு 20வது வயதில் நான் பிறந்துவிட்டேன். இப்போது எனக்கு வயது 20 தான்.

என் பிதாவின் ஆசையால் நல்ல அழகான பணக்கார வீட்டுப் பெண்ணை எனக்கு மணமுடிக்க த்வஜாரோஹணம் ஆரம்பமாகிவிட்டது. வரதட்சிணை வேட்டையை நான் அடியோடு வெறுக்கும் கோஷ்டியைச் சேர்ந்தவன்; அதனால் வெகு சாமர்த்தியமாக என் கல்யாணத்தைப்பற்றி நான் தட்டிக் கழித்துக் கொண்டு வந்ததோடு அப்பாவிடம் சண்டையும் பிடித்து விட்டேன். இடையில் எனக்கும் என் பிதாவுக்கும் பேச்சு வார்த்தை கூட இல்லாத நிலை ஏற்பட்டதில் நான் பலவிதத்தில் வீட்டில் சங்கடப்பட நேர்ந்தது.

ஒருதினம் நான் இந்த விஷயமாகத் தீர்க்க யோசனை செய்து எனக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டேன்.: அதாவது வரதட்சிணை வேட்டையை என் பிதாவின் மறுமண விஷயத்தில் மாற்றிவிட, ஒரு கல்யாணத் தரகனைப் பிடித்து ஏற்பாடு செய்துவிட்டேன். இக்காலத்தில் படித்துவிட்டு உத்யோகம் பார்க்கும் சில அம்மாமிப் பெண்கள் 35, 40 வயதுக்கு மேல் இளமை தோன்றி, மணம் செய்துகொள்ளும் ஆசையுடன் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதைப் பார்த்த பிறகுதான் எனக்கு அந்த எண்ணம் ஊர்ஜிதமாகியது. எங்கள் வீட்டிலும் சமயல்காரனைத் தவிர வேறு திக்கில்லை. இத்தகைய பெண்களுக்கு எங்க அப்பாவைப் போன்றவர்கள் தானே கிடைப்பார்கள்.

அதனால் ஒரே பிடிவாதமாய் 35 வயதுடைய ஒரு அம்மாமியை நானே முன் நின்று எங்கப்பாவுக்காகப் பேசி முடித்துவிட்டேன். 5 ஆயிரம் ரூபாய் அவளுடைய பிதா என் பிதாவிடம் கொடுத்துவிடுவதாயும், ரகஸியமாய்க் காரியத்தை முடித்துவிடுவதென்றும் தீர்மானித்த பிறகு என் பிதாவிடம் இந்த விஷயத்தைச் சரியான சமயத்தில் கூறிப் பணத்தாசை மணத்தாசை இரண்டையும் தூண்டிவிட்டு அவரைச் சரிப்படுத்தி வரதக்ஷிணை ஏலத்தில் 5 ஆயிரம் ரூபாய்க்கு அவரை வ்யாபாரம் செய்துவிட்டதால் நான் தப்பித்துக் கொண்டுவிட்டேன்!

அப்பாவைவிட அவருடைய மனைவி வரதக்ஷிணை எதிர்ப்புச் சங்கத்தில் சேர்ந்து ப்ரசாரம் செய்ய முனைந்துவிட்டதால் எனக்கு இனி பயமில்லை யல்லவா?

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

"ஸ்ரீவரமங்கை"

நான் யாரு? என்ன?...என்பதைப்பற்றி வெளியிடவேண்டிய அவசியமில்லை. ஆனல் மகாத்மாஜி ஸேவாசங்கத்தில் 12-11-54-ந் தேதியன்று நடந்த "பணப்பேராசை" என்கிற நாடகத்தை நான் தற்செயலாகப் பார்க்கநேர்ந்தது. அதன் காரணமாகவே நான் என் வாழ்க்கையிலும் ஒரு சம்பவத்தை எழுதத்துணிந்தேன். இதை ப்ரசுரித்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; நான் எழுதியதை ஆசிரியராவது கட்டாயம் பார்ப்பாரல்லவா?...அதனல் எழுதுகிறேன்.

நாங்கள் திருப்பதிக்குப் போய்விட்டுத் திரும்பும்போது சென்னைக்குவந்து ஸ்ரீபார்த்தஸாரதிப்பெருமாளை ஸேவித்துவிட்டு ஸ்ரீ வானமாமலை ஜீயர்ஸ்வாமியையும் ஸேவித்துவிட்டுப் போகலாம் என்று வந்தோம். மோகினியை நாங்கள் வெகு ஆவலுடன் வாசிப்பவர்கள். ஆதலால், மோகினி ஆசிரியர் எழுதிய "அநுபோதயம்" அல்லது "பணப்பேராசை" என்ற நாடகத்தைச் சங்கத்தார் போடப்போவதை அறிந்து நான் சந்தோஷத்துடன் அன்று 1. ரூபாய்க்கு டிக்கட்டு வாங்கிக்கொண்டு வந்தேன். வெகு வெகு பொறுக்கான—கண்ணியமான—பெண்களின் அபாரக்கூட்டத்தைப் பார்க்கும்போது எனக்குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

நாடகத்தின் அழகையும் கவர்ச்சிகரமான உணர்ச்சிபாவம் நிறைந்த நடிப்பையும் கண்டு தொழிலாளிகள் கூட வெட்கப்படத்தான்வேண்டும். அத்தனை தத்ரூபமாய் ஜோராய் இருந்தது. வரதக்ஷிணையின் பிசாசுக்குச் சரியான சவுக்கடி கொடுக்கும் இந்த நாடகத்தைப்பற்றி எழுத எனக்குச் சக்தியே இல்லை. கதைமுடிந்து கற்பூரம்சுற்றி த்ருஷ்டிகழித்த பிறகும் நான் அந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. லயித்துப்போய்விட்டேன். என் எண்ணம் பூராவும் கதையின் மூலம் என்னையே சுற்றிக்கொண்டு பழைய விஷயத்திற்கு இழுத்துச் சென்றது.

என்னுடைய மாமனர் மாமியார் படுராக்ஷஸர்கள்! வரதக்ஷிணை வாங்கும் வரனைப் பெற்று வந்தவர்கள். என்னை ஏதோ வெகு நாட்களுக்கு முன்பு சொற்பத்துகை வரதக்ஷிணையில் கொண்டு வந்துவிட்டார்கள். எனது கடைசி மைத்துனருக்குக் கல்யாணமாகும்போது நான் இரண்டு குழந்தைக்குத் தாயாகிவிட்டேன். தங்களுடைய வரதக்ஷிணை கைவரிசைகளைப் பூராவும் கடைசி பையன் கல்யாணத்தில் காட்டிவிட எண்ணினர்கள். இது நடந்து இப்போது 10 வருஷமாகிவிட்டது. அப்போது சீர் சகலத்திற்கும் 8 ஆயிரம் வரதக்ஷிணை சேர்த்து வாங்கித் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ஒரு பெண்ணைக்கொண்டுவந்தாயிற்று.

பெண்வீட்டிற்கு வந்தபிறகு என் மாமியார் முதலில் அவளை உயர்வாகவும் வரதக்ஷிணை அதிகம்இல்லாதுவந்த என்னை மிகமிக

மட்டமாகவும் நடத்தினர்கள். அந்தப் பெண்ணும் என்னை அப்படி ஒரு தினுசாகத்தான் பார்த்தாள். நல்ல வேளையாக என் கணவருக்கு மாற்றலாகிவிட்டதால் நான் நாக்பூருக்குப்போய்விட்டேன்.

எட்டாயிரம் வரதக்ஷிணை கொண்டுவந்த பெண்ணுக்கு சாந்தி முகூர்த்தத்திற்காக 4 ஆயிரம் கேட்டார்கள். 2 ஆயிரம் முதலில் கொடுத்துவிட்டுப் பிறகு 2 ஆயிரம் கொடுப்பதாகச் சொல்லியபடி கொடுக்காததால் கொடுமைப் புராணம் ஆரம்பமாகிவிட்டது. அந்தப் பெண்ணின் பிதாவுக்கு வ்யாபாரத்தில் நஷ்டம் வந்து திடீரென்று சருக்கிவிட்டார்......அதே சமயம் அந்தப் பெண் கர்ப்பவதியானுள். பழையபாக்கி 2 ஆயிரமே வரவில்லை. புதியதாக சீமந்தத்திற்கு கேட்டார்கள். வீண் வளர்த்தல் ஏதுக்கு?— இந்த அநியாயப் பணப்பேராசையின் பலன் அந்தப் பெண் ஆஸ்பத்ரியில் ப்ரஸவித்த குழந்தையைப் போட்டுவிட்டுத் தற்கொலை புரிந்துகொண்டு செத்தாள்!

நாடகத்தில் கடைசீ பாகத்தில் வரதக்ஷிணையின் அலங்கோலத்தினல் தற்கொலை புரிந்துகொள்ளும் விஷயத்தைப் பத்திரிகையில் படிக்கும்போது சர்மாவுக்குக் கண்ணெதிரில்தெரிவது போல் காட்டிய கட்டம் என்னை உருக்கிவிட்டது. அந்த விஷயத்தைத் தெரிந்துதான் இந்தக் கதையை எழுதிவிட்டார்களோ என்றுகூட நான் நினைத்தேன். சொர்ணவிக்ரகம்போன்ற குழந்தை பரதேசியாகிவிட்டது. அது என்னிடம் வளர்கிறது. இந்தத் துக்கத்தில் ஓடிவிட்ட என் மைத்துனர் இன்றும் காணப்படவில்லை. பாழும் வரதக்ஷிணைக்காகப் பேயாய்ப் பிறந்த என் மாமனார், மாமியார் காலமாகி விட்ட பிறகும் சாபம் வாங்குகிறார்கள்.

இம்மாதிரி கதைகளை அடிக்கடி பேட்டைக்குப் பேட்டை நாடகம் போட்டு மக்களுக்கு உணர்ச்சியை உண்டாக்கி இந்தப் பேயை ஒழிக்கவேண்டும். இதுபோல எத்தனை கொடுமைகள் எங்கெங்கெல்லாம் நடக்கிறதோ...யார் கண்டது! என் உணர்ச்சி பொங்கிவிட்டதால் இதை எழுதுகிறேன். நாடகம் பலேஜோர்! நாடகமாகவே இல்லை. தத்ரூபமாக இயற்கையாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. 'தோட்டுத் தோட்டுப் பேசுவான்'' என்ற பாட்டும் நாட்டியமும் சிறு குழந்தைகள் ஆடிய நாட்டியமும் வெகு அத்புதமாயிருந்தது. கதையில் வரும் சேகரனைப்போல் என் மைத்துனனும் எங்காவது தப்பிப்பிழைத்து வந்துவிடக்கூடாதா என்று என் நெஞ்சு ஏங்குகிறது.

*

ஜகன்மோகினி

32-வது ஆண்டு ஆரம்பம், ஜனவரி 1955.

தனிப் பிரதி அணு 4. வருடச் சந்தா ரூ. 3.

திருமங்கைமன்னன் விஷயமாக

ஸ்ரீமத் மணவாள மாமுனிகள் அருளிச்செய்துள்ள

தனிப்பாசுரங்கள்.

வண்ண விருத்தம்.

உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மாதர்பால்
உருகவைத்த மனமொழித்து உலகளந்த நம்பிமேல்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செய்கையான்
மறையுரைத்த மந்திரைத்த மாலுரைக்க வவன்முனே
மடியொதுக்கி மனமடக்கி வாய்புதைத்து ஒன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றஅந்த நிலமையென்
கண்ணைவிட் டகன்றிடாது கலியனாணை யாணையே! (1)

வெண்பா.

காதுஞ் சொரிமுத்துங் கையுங் கதிர்வேலும்
தாது புனைதாளுந் தனிச்சிலம்பும்—நீதிபுனை
தென்னாலி நாடன் திருவழகைப் போல
என்னாணை யொப்பா ரிலை. (2)

வேலணைத்த மார்பும் விளங்குதிரு வெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்து வலச்செவியும்—காலிணைத்த
தண்டையும் வீரக்கழலும் தார்க்கலியன் நன்முகமும்
கண்டுகளி கூருமென் கண். (3)

இதுவோ திருவரசு இதுவோ மணங்கொல்லை
இதுவோ வெழிலாலி யென்னுமூர்—இதுவோதான்
வெட்டுங் கலியன் விறட்டிநெடு மாலையெழுத்
தெட்டும் பறித்த விடம். (4)

வில்லிப்புத்தூரார் பாடியது.

"வலியி லன்று தந்தை செற்ற மைந்தனுக்கு வந்தபேர்
நலிவெலா மகற்று காம நாலிரண் டெழுத்துடன்
பொலியு நாம மறைகள் சொன்ன பொருள்விளங்கு நாமமுன்
கலியன் எங்கள் மங்கை மாதி கண்டுகொண்ட நாமமே.

கார்த்திகையில் கார்த்திகை நாள் தான்!

வாழ்க்கை தீபம்.

5 N211, N22 S M N54 31.12

வை. மு. கோ.

சௌபாக்யவதி லக்ஷ்மிக்கு அனேக ஆசீர்வாதம், உபய குசலம். இம்முறை தீபாவளிக்கு நீங்கள் எல்லோரும் இங்கு வருவீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் அங்கேயே விமரிசையாய்க் கொண்டாடிவிட்டதாக உன் கடிதத்தைப் பார்த்து மிக்க சந்தோஷமடைகிறேன்....பாண வேடிக்கையினால் ஒன்று இரண்டு இங்கு சேதமாய்விட்டது. அங்கு ஒன்றும் இல்லாமல் இருக்கிறதா?...என்று நீ கேட்டு எழுதி இருக்கிறாய். சிறிய ஊராகிய அங்கே சேதங்கள் ஏற்பட்டதென்றால் பெரிய பட்டணத்தில் கேட்கவேண்டுமோ? “விளையாட்டே வினையாக முடியும்” என்பது பழமொழி; அந்தப் பழமொழியின் உண்மையைப் பட்டாசு வெடியினால் நிதர்சனமாய்ப் பார்க்கிறோம். ஆதிகாலத்தில் நரகாஸுரன் இறந்தபொழுது தான் பாவியாகவிருப்பினும் அந்த நாளைக் கொண்டாடவேண்டும் என்று பகவானிடம்ப்ரார்த்தித்ததினால் இந்தத் தீபாவளிபண்டிகை நடக்கிறதேயன்றி, நரகாஸுரன் காசைக்கரியாக்கி வாணங்களைக்கொளுத்தி விபத்தை விலைக்கு வாங்கிகொள்ளும்படியாயும் அருவருக்கக் கூடிய விதத்தில் மாம்சங்களைத் தின்று கொட்டமடிக்குமாறும் ஒருநாளும் வரன்கேட்டே இருக்கமாட்டான்.

ஜயப்ரதமாய்க் கொண்டாடும் பண்டிகையில் இத்தகைய விபரீதச்செயல்களால் எத்தனை படுமோசமாய்விடுகிறது தெரியுமா? பட்டாசு வெடியின் விபரீதத்தை என் கண்ணாலே பார்த்தது கணக்கில்லை! “தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று” என்ற பழமொழிப்படி, உயிருக்கு வந்தது உடலுடன்விட்டது சில குழந்தைகளை. நல்ல மங்களகரமான பண்டிகை நாளில் வேதனை விசாரம் விட்டுக் குதூகலமாகப் பூரிக்கவேண்டிய சமயத்தில் சில வீடுகளில் பாணங்கள் செய்த பரிபவத்தால் சில குழந்தைகளுக்கு கையில் கட்டு, காலில் கட்டு, முகத்தில் கட்டு, உடலில் பல பாகங்களில் கட்டுகளுடன் பார்த்துத் தவிப்பது, சிலர் ஆஸ்பத்திரிலேயே கொண்டுவிட்டுத்திண்டாடித் தவிப்பது, இப்படியாக மனத்தில் அமைதியின்றி, இதயத்தில் குதூகலமின்றி, சங்கடத்துடன் சிலருக்குத் தீபாவளி கழிந்தது. இதைச் சில இடங்களில் நேரில் பார்த்ததால் எழுதுகிறேன். லக்ஷ்மி! இம்மட்டுமா? இன்னும் சில இடங்களில் அணுகுண்டு பாணமாம்!...அடேயப்பா!...அதன் பெயரைக் கேட்கும்போதே நம் சரீரம் நடுங்குகிறது. நிஜமான யுத்தத்தில் உண்மை அணுகுண்டினால் விளைந்தவிபரீதத்தைப் படித்துப் பதைத்தோம். இந்த அணுகுண்டு பாணமே இப்படி இருக்கும்போது அது எப்படி

183186.

இருக்கும்! என்று நினைத்தால் நிலையிடமே கொள்ளவில்லை. இந்தப் பாழும்பாணத்தினால் சிலருக்கு உயிரே போய்விட்டது. சிலருக்குக் காது செவிடாகிவிட்டது. சிலர் வீடுகளில் கூரைக் கொட்டாய் பற்றிக்கொண்டு பாணவேடிக்கையாய் எரிந்தது! நெருப்பு அணைக்கும் மிஷன் வந்து அதை அணைத்து மற்றப்படி விபத்தை மேலும் பரவாமல் தடுத்தது.

ஆஸ்பத்திரிகளில் இருக்கும் சில டாக்டர்களை நான் சந்தித்துப் பேசியபோது தீபாவளிக்கு முன்னும் பின்னும் பட்டாசு விபத்தினால் ஏற்பட்ட பயங்கர நோயாளிகள்தான் அதிகமாக வந்திருக்கிறார்கள்.........என்று அந்த டாக்டரம்மாள் பட்டாசின் பரிபவங்களை எல்லாம் விளக்கிச்சொன்னார்கள். ஒரு பையனுக்கு முகம் பூராவும் அணுகுண்டினால் எரிக்கப்பட்டுக்கட்டுகட்டி இருப்பதாயும், முகமே உருக்குலைந்து விகாரப்பட்டுப்போய்விடுவான் என்றும் அவர் சொல்லும்போது...ஏன் பாழும் பட்டாசுக்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டும்?...யுத்தகாலத்தில் லைசென்ஸ் தராது தடுத்ததுபோலவே செய்துவிடக்கூடாதா?...என்று நாங்கள்பேசிக்கொண்டோம்.

தீபாவளி என்ற கொண்டாட்டமென்கிற பேரில் பெரிய போராட்டம்தான் ஆய்விடுகிறது. வாசலில் நடமாடுபவர்களுக்கு நிம்மதியில்லை. பண்டம் பாடி விற்பவர்கள் கதியும் அப்படியே. மின்னல் தாக்குதல்போல் வெளிச்சமும், பேரிடி போன்ற சப்தமும் கேட்டு மாடுகள் பால் கறக்காமல் துள்ளுகின்றன! அதனால் பால்காரன், வாடிக்கைக்காரர்களுக்குப் பால் கொடுக்கமுடியாமல் பெரு நஷ்டம் ஆய்விடுகிறது. தீபாவளி அன்று பின்மாலை பால் கறந்துகொண்டு இருந்த போது பாணங்களில் ஒன்று பறந்துவந்து மாட்டின்மேல் விழுந்தது; அது ஒருஉதையுடன் துள்ளிக்குதிக்க, பால்காரன் பாலுடன் பல்டி அடித்துவிழுந்து பெரிய ரகளைச் சண்டையாய் விட்டது! தன் வீட்டுப் பாணத்தால்மட்டும் விபத்து என்று நினைக்கவேண்டாம். எதிர் வீட்டுப் பாணம், பக்கத்து வீட்டுப் பாணம், அண்டை வீட்டுப் பாணம்...எல்லாம் வந்து தமது ஸாமர்த்யங்களைக் காட்டி எத்தனை குழந்தைகளை ஹிம்ஸித்து இருக்கிறது தெரியுமா?

ஏதோ உத்ஸாகத்திற்கும் விளையாட்டுக்கும் பெரியவர்கள் சிறியவர்கள் எல்லோரும் குதூகலமாக இருப்பதற்குமான அழகிய கலர் மத்தாப்புகள், பூவத்திகள், கம்பிவத்திகள் இப்படியான ஆபத்து இல்லாமல் ஆதிகாலம் முதல் வழங்கிவரும் சில பாணங்களைக் கொளுத்தலாம். அந்தக் காலத்தில் இப்படி விபத்தே ஏற்பட்டது இல்லை. மனிதர்களுக்கு முக்யமான அவயங்கள் கண்ணும், காதும். கண் கூசும்படி மின்னல் வெளிச்சம், காது செவிடாகும்படி அதிர்ச்சி தரும் வெடி இவைகளை நினைத்தால்கூட வெறுப்பாய் இருக்கிறது.

இதனால்தானா நமக்கு உத்ஸாகம் ஏற்படப்போகிறது? கடவுள் க்ருபையில் பிழைத்துக்கிடந்தால் அடுத்த வருஷம் இம்மாதிரியான லைஸென்ஸ் கொடுக்கக்கூடாது என்று எல்லோருமாகச் சேர்ந்து விண்ணப்பித்துக்கொண்டு சண்டை இடவேணும் போல் தோன்றுகிறது.

இதற்கு அடுத்தபடியாக படாசின் வைபவத்தின் சோதனைக்குக் கார்த்திகைப்பண்டிகை இருக்கிறது. தீபாவளியில்விளைந்த இந்தபயங்கர விபத்துகளை அறிந்தபெற்றோர்கள் இம்மாதிரியானகொடியபாணங்களைக் கார்த்திகைக்கு வாங்கித் தராது இருந்தால் ஓரளவுக்கு ஆபத்தைக் குறைக்கலாம். அந்த பாணத்திற்காகச் செலவிடும் காசைக் குழந்தைகள் இஷ்டப்படி வேறு வஸ்துக்களாகவோ, சொக்காய்களாகவோ வாங்கித் தந்தால் எவ்வளவோ உபயோகமாக இருக்கும்.

பட்டாஸுகள் வாங்கிச் சுடுகிறவர்களைத் தவிர பட்டாஸுக் கடைகள் வைக்கும் மகானுபாவர்கள் தாக்ஷிண்யமின்றிச் சுட்டுத் தள்ளிவிடும் கொடுமையைச் சகிக்க முடியவில்லை. தீபாவளியன்று ஆனந்தமாக ஸ்வாமி பவனிவரும் போது இத்தகைய பட்டாசு வெடிகளின் பயங்கரத்தினால் ஸ்வாமியைத் தூக்கிக்கொண்டு வரும் ஸ்ரீபாதம்தாங்கிகள் எத்தனை திண்டாடுகிறார்கள் தெரியுமா? காலடியில் பாணம் சுட்டநெருப்பும், பாணமே சுழன்று தலைக்குமேல் வருவதுமாகவிருந்தால் அவர்கள் என்ன செய்ய முடியும்? இந்தப் பாணங்களின் புகைமண்டலத்தில் ஸ்வாமியின் திவ்ய தரிசனமும் தெரியாமல் போய்விடுகிறது! அடேயப்பா! இத்தகைய பயங்கர வெடிகளின் ஸ்வரூபத்தையறிந்து இனியாவது இதை எல்லோரும் சேர்ந்து கூடுமான வரையில் விலக்கினால் நலம்.

லக்ஷ்மீ! இப்பொழுது நம் பாரதநாடு பூராவும் அன்னை ஸ்ரீஸாரதாமணி தேவியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்புடன் கொண்டாடி வருவதை நீ பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்திருக்கலாம். உங்கள் ஊரில்கூட இத்தகைய உத்தமியின் விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்கிறார்களா? அப்படிச் செய்யவில்லை என்றால் அதற்கான ஏற்பாடுகளை நீங்களாவது செய்து நடத்த வேண்டும். எப்போதும் நம்நாட்டின் பெருமைக்குச் சிகரம் வைத்ததுபோல் ப்ரகாசிப்பது உத்தமப் பெண்மணிகளின் கற்பின் சிறப்பேயாகும். சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்புதான் இவ்வுலகை விட்டு மறைந்த அன்னையின் புகழை நம் நாடு உள்ளபடி அறியவேண்டும். அதைப் பின்பற்றி மற்றையோரும் கூடுமானவரையில் நடக்கவேண்டும். இதை நீ மறக்காமல் செய்வாயென நம்புகிறேன்.

உன் மாமி.

இசைப் பகுதி
பூரிகல்யாணி.

6. வாரண

[மாயவன் தன்னை மணஞ்செய்யக் கண்ட

4. நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென் தன்னை
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

5. கதிரொளி தீபம் கலசமுட னேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந் தெதிர்கொள்ள

லகு த்ரு த்ரு	லகு த்ரு த்ரு
;;பா — பாபா — பா மா	காமாகரி— ஸா ஸா —ஸநிதா
;.நால் — தி . . . — சை . . .	த்தீ . ர் —த் த ங் . — . .
.;பா — பாபா — பா மா	பமபாதா—தா தா — தாதா
;.பா — ர்ப்ப . — ன . ச்	சி . . ட் — ட ர் — க ள் .
;; ப — பா தா — தா பா	ஸ்ாஸ்ாஸ்ா-- ஸ்ா ஸ்ா — ஸ்ா நி
.. பூ — ப்பு . .. — னை . .	க ண் . — ணி . — ப்பு .
;; ஸா — ஸ்ாஸ்ா — ஸ் ா நீ	தா தாஸ்நி-- தபபா — பா பா
..கா — ப்பு . . — நா ண்	க . . —ட்ட . . —க்க . .
	தோடி
;;பத — பாபா — மா மா	மாபதபத— பமகா — மாமா
..கதி — ரொ — ளி .	தீ . . . . .— . . . —ப ம் . . .
;; தநி — ஸ்ா ஸ்ா — ஸ்ா ஸ்ா	ஸ்ாஸ்ாஸ்ா— நீ நீ —ஸ்ா ரிக
..சதி — ரி . — ள .	ம ங் . — கை . —ய ர் . .
;; தத — தா தா — தா தா	தாகாகா — ரீ ரீ — ஸ்ா ஸ்ா
..மது —ரை . . — யா ர்	ம ன் ன . — ன . — டி .
;; த நி— ஸ்ா ஸ்ா—ஸ் ரி ஸ் ரி	ஸ்நிதாதா-- நீ நீ — ஸ்ா ஸ்
.அ தி — ர . —ப்பு . . .	கு . . . — த க் — க .
	பைரவி
;; த நி—ஸ்ா ஸ்ா — ஸ்ா ஸ்ா	ஸ்நிரிஸ்ஸ்நி-தா,தா — பா பா
..ம த்—த . . . — ள ம்	கொட்... — . . — ட .
;; ரீ —ரிஸ நீ — தா தா	ஸாஸாஸா- ரீ ரீ — க ரிஸா
..முத்—து . . — டை த்	தா . . — . . — ம . ம்
;; மா — பா பா — தா தா	நீ நீ நீ — ஸ்ாஸ்ா— ரீ ரீ
..மைத்— து . . — ன ன் .	ந ம் . . — . . — பி .
;; தநி — ஸ்ாஸ்ா — ஸ்ா ஸ்ா	நீநிரிஸ்நி—த த தா — பா பா
.கைத்— ச . — ல ம் .	பற் . . . .—ற . . க்— க . . . .

திருமொழி

ஏ. ராஜம்மாள்.
தாளம்: திருபுடை

மாயிரம்

தூயநற் கனவைத் தோழிக்குரைத்தல்.]

மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டுஎங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.

6. மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

லகு த்ரு த்ரு	லகு த்ரு த்ரு
; ; ஸ ரி — கா கா — கா ரீ	கா மா மா—பா தா—பா பா ‖
. கொண — ர் ந் து. — ந .	ணி . . — ந ல் — கி . ‖
; ; த ப — ஸ்ா நீ — தா தா	பா தா நீ —டா பா— பா பா ‖
. . ப ல் — லா . —	ரெ டு த் — தே த் — தி . ‖
ஸ்ரிகாகா — ரீ ரீ — ஸ்ா ஸ்ா	ஸ்நிதாஸ்நி- தபபா —பா பா ‖
ணி . . . — த . — னே .	டென். . . —த ன் — னை ‖
மகநிதநீ —பா பா — பா ப ம	காகாபம — க ரி ரீ —ஸா ஸா ‖
ணா . . . க் — க ண் — டே ன்	தோ . . . —ழீ . . — நா ன் ‖
; ; ப த — நீ நீ — நீ தா	தநிஸ்ரிஸ்ரி-ஸநிதா— தா தா ‖
. . க ல — ச . — மு .	ட . . . —னே . . — த் தி . ‖
ரீ ஸா நீ — நீ நீ — தா தா	தநிஸ்நிரிஸ்-நிததா—தா தா ‖
. . தா ம் — வ ந் — தெ .	தி . . .ர்—கொ ள் — ள . ‖
; ; ஸ் க — ரீ ரீ — ஸ்ா ஸ்ா	ஸ்நிரிஸ்நித- நீ நீ —ஸ்ா ஸ்ா ‖
. . நி லை — தொ — ட் டு . .	எங் . . . — . . — கு ம் ‖
ஸ்நிஸ்ாஸ்ரி-ஸ்நிதா— பா பா	மாபதபத—பமகா— கா ரீ ‖
ணா . . —க்கண் — டே ன்	தோ . . . . — ழீ . — நா ன் ‖
; ; ப நி —தா தா — பா பா	மகமபதப—பமகா— ரீ ரீ ‖
. . வ ரி — சங் . . — க ம் .	நின் . . . . — றூ — த . ‖
; ; ரி க —மா பா — ப நி த ப	மகமபதப—பமகா— ரீ ரீ ‖
.. நி ரை — தா — ழ் ந் த	ப ந் . . . . —த . ற் — கீ ழ் ‖
ஸ்ாரீ கா — க ரி ரீ — ஸ்ா ஸ்ா	நீநிரிஸ்நி —நிததா— பா பா ‖
ம. து . . — சூ . . — த ன்	வந் து... —என் ..— னை க் . ‖
தநிஸ்ாஸ்நி–தாதா— பா பா	பாபதபம—பாபத— நீ நீ ‖
ணா . . .க்— கண் — டே ன்	தோ . . . —ழீ . . — நா ன் ‖

மேனாட்டுத் தத்துவம்

இரண்டாம் பாகம்

1. சாக்ரடீஸ் (470-399 கி.மு.)

ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அத்தீனியர்களே! என்மீது குற்றஞ்சாட்டினோர் பொழிந்த மொழிகளைக் கேட்டபொழுது, எந்த உணர்ச்சி வெள்ளம் உங்கள் மனத்தில் பாய்ந்ததோ? யான் அறிந்திலேன். ஆனால், மனத்தைக் கவரக்கூடிய அவர்கள் சொற்பொழிவுகள் யான் யார் என்றதையே மறக்கச்செய்துவிட்டன!... அப்படி அமைந்திருந்தது அப்பொழிவுகளின் விளைவு. ஆனால், அவர்கள் ஓர் உண்மையான உரை கூடச் சொன்னதாகத் தெரியவில்லை; எத்தனையோ பொய் பொதிந்த சொற்களை அவர்கள் வழங்கினார்கள்—இவைகள் என்னைத் திடுக்கிடச் செய்யவில்லை—ஆனால், அவர்கள் கூறிய ஒரு வார்த்தைதான் ஒரு வியப்பை எழுப்பிற்று; என்னுடைய சொல் வன்மையால் நீங்கள் ஏமாற்றம் அடைந்துவிடாதீர்கள் என்று சொன்னார்களே... அதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! இப்படிச் சொன்னதிற்காக நாணத்தால் அவர்கள் தலைகுனிய வேண்டும்.

ஏனெனில், என்வாயைத் திறந்தால் அவர்கள் பச்சைப் பசும் பொய்கள் வெளியாகிவிடும்! என் உண்மையின் ஆற்றலை மனத்தில் வைத்தே, 'என் சொல் வன்மை' என்று கூறினார்களோ தெரியவில்லை. சொற் சாதுரியத்தில் என் ஆற்றல் இல்லை; உண்மையிலேதான் அது வேரூன்றி நிற்கின்றது. உண்மையை உரைப்பதில் என் வன்மை இருக்கிறது என்றதை ஒப்புக்கொள்ளுகிறேன். அவர்கள் ஓர் உண்மையான வார்த்தைகூடக் கூறவில்லை ஆனால், என்னிடமிருந்து முழு உண்மையுங் கேட்கப் போகின்றீர்கள். அவர்கள் தரும் அலங்காரமான சொற்களை என்னிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கமுடியாது. தெருவிலே வழங்குகிற சொற்களையே நான் உபயோகிக்கப்போகின்றேன். அதற்கு எனக்கு அனுமதி தரவேண்டும்.

எனக்கோ வயது எழுபதுக்குமேல் ஆகப்போகின்றது. நியாய மன்றத்தில் முதல்முதலில் நான் அடிவைக்கின்றேன். ஆதலால், என்னை ஓர் அன்னியனென்றே நீங்கள் கருதலாம். நான் எப்படிப் பேசுகிறேன் என்று கருதாது நான் சொல்லுவதில் நியாயம் இருக்கிறதா என்று மட்டும் கவனியுங்கள். பேசுகிறவன் உண்மையைக் கூறட்டும்; நீதிபதி நியாயமாகத் தீர்ப்புச் சொல்லட்டும்.

அவர்கள் என்மீது சாட்டுங் குற்றங்களை ஆராய்கின்றேன். மண்ணிலும் விண்ணிலுமுள்ள பொருள்களை நான் துருவிச் சோதனை செய்கின்றேன் என்றும், நான் கெடுதலைப் புரிகின்றவன் என்றும், கெடுதலை நல்லதுபோலத் தோன்றச்செய்கிறேனென்றும் கூறுகின்றனர். பௌதிக சாத்திரம் வல்லோர்களை நான் குறை

கூறுவதாக நினைக்க வேண்டாம். அவ்விஷயங்களைப் பற்றி யாதொரு தொடர்பும் எனக்குக் கிடையாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரிஸ்டாபினீஸ் தமது நாடகத்தில் என்னை எள்ளி நகையாடிய விஷயம் நீங்கள் அறிவீர்கள்....நான் ஓர் உபாத்தியாயர்; வித்தையை விற்றுப் பணம் வாங்குகிறவன்... என்று மொழிகின்றார்கள். இந்தச் சொற்களில் கொஞ்சங்கூட ஆதாரமில்லை. தக்க போதனைக்குப் பணங்கொடுத்தால் அது போற்றப்படவேண்டியதுதான். ஜியார்ஜியஸ், ஹிப்பியஸ் முதலியோர்கள் இருக்கின்றனர். அவர்கள் போற்றுதற்குரியவர்களே. ஆனால், நான் ஒரு சொபிஸ்ஸைப்போல் பணம் வாங்கினதில்லை என்றதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆனால், குற்றச்சாட்டுதல்களுக்கு ஏதாவது மூலம் இருக்க வேண்டுமே? என்று ஒருவர் வினவலாம். என்னுடைய புகழ் என்னிடத்திலுள்ள ஞானத்தால் பிறந்ததென்று சொல்லலாம். நான் ஒன்றை அதிகப்படுத்திக் கூறுகின்றேன் என்று நான் பேசுகின்றபொழுது குறுக்கிட வேண்டாம். டெல்பியில் குறி கேட்டபொழுது சாக்ரடீஸைப்போல அறிவாளி இல்லை என்ற குரல் வந்தது. அது உண்மைதானா என்று பரீட்சை செய்யத் தொடங்கினேன். பல துறைகளில் சிறந்தவர்களை எல்லாம் வினவினேன். தக்க பதில்கள் வரவில்லை; அவர்களெல்லோரும் எனக்குப் பகைவர்களாய்விட்டனர். இப்படி நான் ஆராய்வதால், என்னிடத்தில்தான் அத்தகைய ஞானம் இருக்கிறதென்று கருதி விடாதீர்கள். ஆண்டவன் ஒருவன்தான் அறிவாளி; மனிதர்களிடத்தில் ஞானமில்லை என்றதை என் மூலமாக அவன் வெளியிட்டானே ஒழிய வேறில்லை. ஆண்டவன் கட்டளையைச் சென்னி மேற்கொண்டு உண்மையின் ஒளியை நாடி நாடெங்கும் நான் திரிகின்றேன்.

நான் தீமை செய்கிறேனாம்! இளைஞர்களைக் கெடுக்கின்றேனாம்! மெலிடஸ்! தங்களை ஒன்று கேட்க விரும்புகின்றேன்: 'எது நல்லது?...நன்மைபுரிகின்ற மாந்தர்கள் நடுவிலே உறைவதா? அல்லது கெட்டவர்கள் மத்தியில் வசிப்பதா?'

'நல்லவர்கள் மத்தியில்தான்' என்று மெலிடஸ் மொழிந்தார்.

'ஆனால், கெடுதல் செய்வதில் எனக்கென்ன நன்மை?' என்று நான் கூறினேன்.

நான் அத்தீனிய தெய்வங்களை இகழ்ந்ததாகச் சொல்லுகின்றனர். நான் சூரியனைக் கல்லென்றும், சந்திரனை மண்ணென்றும் சொன்னதாகத் தெரிவிக்கிறார்கள். அனச்சகோராஸை மனத்தில் வைத்துச் சொல்லுகிறதுபோல எனக்குத் தோன்றுகிறது. எனக்குப் பல பகைவர்கள் இருக்கின்றனர். எனக்கு மரணந்தான் கிடைக்கும் என்பது உண்மையே. நான் அழிந்தால், அதற்குக் காரணம் மெலிடஸ் இல்லை; அனிடஸ் இல்லை; சான்றோர்களைக் குறைகூறுகின்ற பொறாமை உலகந்தான்.

இதனால் அநேக மெய்யடியார்கள் மாய்ந்தனர். அவர்களில் நானும் ஒருவனாயிருப்பதில் அபாயமில்லை. 'அகால மரணத்தைப்

பற்றி ஒருவன் நாணவேண்டாமா?' என்று கேட்கலாம், மரணத்தைப்பற்றியோ, வாழ்வைப் பற்றியோ ஒருவன் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. செய்வது ஒழுங்கா? ஒழுங்கில்லையா?...என்றதைப்பற்றித்தான் மனிதன் கவலையுறவேண்டும். அகிலீஸ் தன் மரணத்தையா, அல்லது தனக்கு விளையும் ஆபத்தையா எண்ணினன்? செய்யவேண்டிய கடமையை எந்த ஆபத்தான நிலையிலும் செய்தே தீரவேண்டும். செய்யத்தவறியதால் பிறக்கும் அவமானத்தைமட்டும் அவன் மறக்கக்கூடாது.

பாட்டிடியாவிலோ, ஆம்பிபாலிஸ்ஸிலோ நான் போர்க்களத்தில் மரணத்தை எதிர்த்துநின்றேன். இப்பொழுது ஆண்டவன் ஒருஞானியின் வேலையை எனக்கு வகுத்துத்தந்திருக்கிறன். மரண பயத்தாலோ, அல்லது வேறு அச்சத்தாலோ, எனக்குரிய வேலையைப் புறக்கணிப்பது தகுதியாகுமா?

மரண பயமென்று பகவர்வது போலி ஞானமாகும். கெடுதல் என்று கருதக்கூடிய மரணமும், ஏன் ஓர் அனுக்கிரகமாக இருக்கக்கூடாது?...என்று நான் வினவுகின்றேன். நியாயமற்றது மிகுதியான கெடுதலை அளிக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இதுமாதிரி சர்ச்சை செய்யாமலிருந்தால், என்னை விடுதலை செய்வதாகச் சொல்லுகிறீர்கள்.

அத்தீனியர்களே! உங்களைக் கௌரவிக்கின்றேன்; நேசிக்கின்றேன். ஆனல், உங்கள் உத்தரவை நான் பொருட்படுத்தேன். ஆண்டவன் எனக்கு வகுத்த பணியைத்தான் நான் ஆற்றுவேன். எனக்கு வாழ்வாள் இருக்கிறவரையில், எனக்குத் தேகத்தில் வலிவு இருக்கிறவரையில் உபதேசம் செய்யத்தான் செய்வேன். ஏன் புகழுக்காகவும், பொருளுக்காகவும், கௌரவத்திற்கும் பாடுபடுகின்றீர்கள்? ஞானத்திற்காகவும், உண்மைக்காகவும், அகவுயிர்வளர்ச்சிக்காகவும் ஏன் பாடுபட முன்வராது தயங்குகின்றீர்கள்? செல்வத்தால் அறம் தோன்ருது. அறத்தில்தான எல்லாம் தங்கி நிற்கின்றன. இதுதான நான செய்யும் உபதேசம்.

இந்த உபதேசம் இளைஞர்களைக் கெடுக்குமானல், அது கெடுதல்தான். அதற்கு நான் என்ன செய்யமுடியும்? இது என் உபதேசமென்று உரைக்கின்றவர்கள் பொய் கூறுகிறவர்களே. என்னைவிடுதலை செய்கிறீர்களோ? இல்லையோ? அதைப்பற்றி எனக்குக்கவலை இல்லை. இதுமட்டும் உங்களுக்கு உணர்த்துவேன். என்னுடைய மாசற்ற அறத்துறையை வேறுவிதமாய் அமைத்துக்கொள்ளமாட்டேன். அநேகமுறை நான் இறக்க நேர்ந்தாலும், என் கொள்கையை மாற்றிக்கொள்ளேன்,

நான் பேசும்பொழுது என்னைத் தடுக்காதீர்கள். உண்மைக்காகப் பாடுபடுகின்ற என்னைக் கொன்ருல் எனக்கு யாதொரு தீங்குமில்லை. உங்களுக்கே தீங்கை விளைவித்துக்கொள்ளுகிறீர்கள்... என்றதை மட்டும் நினைவூட்டுகின்றேன். மெலிட்டஸ்ஸும் அனிடஸ்ஸும் எனக்குத் தீங்கிழைக்கமுடியாது. என்னைக் கொன்ருல் என்னைப்போல் வேறு மனிதன் உங்களுக்குக் கிடைக்கமாட்டான். பகவான் என்மூலமாக உங்களை நல்ல நெறியில் நிற்கும்படித் தூண்டுகின்ருன். இப்படி நான் உபதேசம் செய்வதால் ஏதோ ஒரு

குணக் குன்று

வை. மு. கோ.

109-வது நாவல்

27

ஆஸ்பத்திரி வாசலில் ஓரே கூட்டம்; அல்லகல்லோலப் படுகின்றது! உத்திராதேவி இறந்து விட்டாள் என்று ஒரு குபார் கிளம்பிவிட்டதே இதற்குக் காரணம்...உத்திராதேவி சாகவில்லை. வீண் புரளிதான் இது; வீண் கலாட்டா செய்ய வேண்டாம்...என்று சிலர் கத்துகிறார்கள். இத்தகைய விஷயங்களை சேகரித்துப் பத்திபத்தியாக எழுதித் தள்ளுவதற்காகவே சில பத்திரிகைகளும் அதைச் சார்ந்த சில நபர்களும் கையில் காமிராவுடன் வந்து படமெடுத்து விஷயங்களைத் தேடி அலைகிறார்கள். சினிமாவைச் சேர்ந்த பலர் வந்து தவிக்கிறார்கள். சிலர் காருடன் உள்ளே பறந்துசெல்வதும் வெளியே வருவதும் அவர்களைக் கண்ட பொது மக்கள் அவர்களிடம் கேட்பதுமான இத்தகைய தடபுடல்படும் இடத்தில் இதை வேடிக்கைப் பார்க்கும் நோக்கத்துடன் பலர் கூடிவிட்டார்கள்.

மூலத்தோட்டத்திற்குப் போகும் வழியில்தான் ஆஸ்பத்திரி இருப்பதால் இந்த அமர்க்களத்தைப் பார்த்துக் கொண்டு போகும் லக்ஷ்மிக்கும் சேகருக்கும் ஓரே கலக்கமும் சங்கடமும் செய்கிறது. விபத்து நடந்த நாளன்று பார்த்திருந்த சிலருக்கு இந்த கார் நம்பர் நன்றாகத் தெரிந்திருந்ததாகையால் சோதாத்தனமாகக் கூச்சலிட்டு, "டேய், டேய்! இதே கார்தாண்டா உத்திராதேவியின் உயிருக்கு எமனாக நின்று வாயில்போட்டுக் கொண்டது! காரைக் கல்லால் அடிடா! கட்டையாலடிடா!" என்று கத்திக்கொண்டு ஓடி வந்தார்கள்.

ட்ரைவர் சாமர்த்தியமாய்க் கூட்டத்தின் சமீபத்தில் அணுகுவதற்குள் வேறு வழியாகக் காரைச் செலுத்திக் கொண்டு போய் விட்டதால் காரில் கல்லடிபடாமல் தடுக்கப்பட்டது. இத்தகைய தடபுடலைக் கண்டு லக்ஷ்மியின் உள்ளம் பின்னும் வேதனையால் துடிக்கிறது. தன் பிதாவுக்கு என்ன ஆபத்து வந்து விட்டதோ என்று தாங்கமுடியாத வேதனை உண்டாகியிருப்பதோடு இதுவும் சேர்ந்து பின்னும் வாட்டுகிறது. கார்வேகமாகச் செல்வதால் எங்கே விபத்து நடந்துவிடுமோ என்கிற பயமும் வதைக்கிறது. இந்நிலைமையில் ஒரு மைல் தூரம் சென்றதும் ரயில்வேகேட்டு சாத்தப்பட்டுவிட்ட

தால் கார் தானாகவே நிற்கும்படியான நிர்ப்பந்தம் உண்டாகி விட்டது. கார் பறந்துசென்று தங்கள் மனத்துடிப்பிற்கு விரைவில் ஒரு வழிகாட்டாமல் நின்று விட்டதே! அப்பா இத்தனைநேரம் எந்த கதியிலிருக்கிறாரோ? என்ன விபரீதத்தைக் கண்ணால் பார்க்கவும் காதால் கேட்கவும் ஆய்விடுமோ! ...என்கிற மனவேதனையுடன் லக்ஷ்மி இடிந்துபோய் உட்கார்ந்திருக்கையில்; "லக்ஷ்மீ! ஏம்மா, ஏதோமாதிரி இருக்கிறாய்? மாப்பிள்ளை! என்ன சமாசாரம்? ஏன் இப்படி எல்லோரும் ஏதோபோலிருக்கிறீர்கள்? சொக்கம்மா!...என்று லக்ஷ்மியின் பிதா கூப்பிட்டதைக் கேட்டுத் திடுக்கிட்டு லக்ஷ்மி திரும்பிப்பார்த்ததும், "அப்பா!! அப்பா!..." என்று லக்ஷ்மி அலறியவாறு இறங்கிவிட்டாள்.

சேகரனுக்கும் ஒன்றுமே புலப்படவில்லை. "மாமா! மாமா...தாங்கள்...என்று கூறியவாறு இறங்கி அவரை அப்படியே தழுவிக்கொண்டான். சொக்கம்மா நடுவீதி என்பதைக்கூட மறந்து அவர் காலில் விழுந்து கெட்டியாகப்பிடித்துக்கொண்டாள். ஒரு விஷயமும் அறியாத நீலகண்டன் ஒரே திகைப்பும் ப்ரமிப்புமடைந்துபோய் இதென்ன விஷயம், எனக்கொன்றுமே புரியவில்லையே? யாருக்கென்ன நேர்ந்து விட்டது? என்று பதைபதைக்கக் கேட்டார்.

உடனே லக்ஷ்மி கண்ணீர் பெருக, நடந்த விஷயங்களைக் கூறி, "அப்பா! உங்களை உயிருடன் நல்லபடி பார்க்கப்போகிறோமா?...என்று கதிகலங்கிப்போய் துடித்தவாறுவந்தோம். கடவுளின் கருணையால் உங்களை எத்தகைய அபாயமுமின்றிப் பார்த்துவிட்டோம். மூலத்தோட்டத்திலிருந்து...என்பதற்குள், "என்னையா அடித்துப்போட்டிருப்பதாகப் போலீஸ் இன்ஸ்பெக்டரா சொன்னார்? இதென்ன அநியாயம்? அரை மணிக்கு முன்புதானே நானும் இஸ்பெக்டரும் ஏதோ ஒரு முக்யமான விஷயமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு இதோ வருகிறேன். முதலில் நாம் வீட்டிற்குப் போவோம். பிறகு பேசிக்கொள்ளலாம்" என்று கூறித் தானும் காரில் ஏறிக் கொண்டார். ஒரே வியப்பும் சந்தோஷமும் பொங்க எல்லோரும் வீட்டிற்கு வந்துசேர்ந்தார்கள். லக்ஷ்மியின் தகப்பனாரைப் பார்த்த உடனே வீட்டில் எல்லோருக்கும் ஒரே சந்தோஷமும் ஆச்சரியமுமாகிவிட்டது. ஒரு விதமான சம்பவமும் இல்லாமலிருக்கையில் இத்தகைய பயங்கரமான விபரீத விஷயத்தைத் துணிந்து யார் சொல்லியிருப்பார்கள்? என்ற ப்ரமிப்புதான் எல்லோரையும் உலுக்கியது.

லக்ஷ்மி கட்டுக்கடங்காத பூரிப்புடன் "அப்பா! முன்பின் தெரியாத புதிய ஊரில் தாங்கள் எங்கே போயிருந்தீர்கள். நேற்று இரவு முதல் உங்களை நான் தேடுகிறேனப்பா! இன்று கேள்விப்பட்ட பயங்கர விஷயத்தின் கொடுமையில் என்

மூச்சே நின்றுவிடும் போலாகிவிட்டது. உங்களைப் பார்த்த பிறகுதான் என் உயிர் வந்தது. ஆகாரம் செய்தாயிற்று இல்லையாப்பா?'' என்று பரிவுடன் கேட்டாள்.

“லக்ஷ்மீ! ஆகாரத்திற்கு எனக்கு எத்தகைய குறைவுமில்லை. எனக்கு இந்த ஊர் புதியதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் எனக்குப் பழைய ஊர்தான். என் ஆபீஸின் வேலை நிமித்தம் நான் சிலமுறைகள் வந்திருப்பதால் எனக்குப் பரிச்சயமானவர்களும் இருக்கிறார்கள். அதனால்தானம்மா இத்தகைய சிறந்த இடத்தை—அதிருஷ்டம் நிறைந்த இடத்தை—உனக்கு முடிக்க நேர்ந்தது'' என்றபோது, சேகர் வியப்புடன் மாமனாரைப் பார்த்தான். சேகரின் பிதாவும் வெகு ஆச்சரியத்துடன் பார்த்தார். “ஏன் ஸார்! இந்த ஊரில் உங்களுக்குத் தெரிந்தவர் யாரு? எனக்கு அதைப்பற்றிச் சொல்லவே இல்லையே! அவர்களையும் கல்யாணத்திற்கு அழைத்திருப்பேனே'' என்றார்.

“ஸார்! அவர்களுக்கு நானே அழைப்பு அனுப்பி இருந்தேன். ஏதோ அசௌகர்யத்தினால் அவர்கள் வர முடியவில்லை! என்பதற்குள், சேகர்.........“நாம் இவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் முக்ய வேலைகளைக் கவனிக்காமல் விட்டுவிட நேருகிறது. உடனே இப்போது போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் இன்ஸ்பெக்டர் எனக்கு போன் செய்த தகவலை அவர்களுக்கு எடுத்துக்கூறி மூலத் தோட்டத்தில் வேறு என்னவாவது விபரீதம் நடக்கிறதா என்பதை அறிய வேண்டும்...மாமா! நீங்களும் வாருங்கள். நாம் இருவருமே நேராகப் போகலாம். போலீஸாரையே ஏமாற்றிவிட்டு போலியாக நடித்து நம்மைக் கலக்கிய மனிதன் யாரோ அவனைத் தேடிப்பிடிக்கும்படி போலீஸாரிடம் தெரிவிக்கவேண்டாமா?'' என்று கூறியபடியயே எழுந்தான்.

“மருமகப்பிள்ளை சொல்வது மிகவும் சரியான யோசனைதான். நாங்கள் போய்வருகிறோம். நீங்கள் நிம்மதியாக இருங்கள்'' என்று கூறிவிட்டு இருவரும் சென்றார்கள். அவர்கள் போனபிறகுதான் லக்ஷ்மிக்கு அந்தக் கடிதத்தின் நினைவு வந்தது...அது என்ன கடிதமோ! அதைப் பார்த்தபிறகு போகச்சொல்லாது போய்விட்டோமே!...கடிதத்தை முதலில் நாமாவது பிரித்துப்படிக்கலாம்...என்று தன் விடுதிக்குச் சென்று கடிதத்தைப் பிரித்தாள்.

கவர் உள்ளிருந்து மூன்று சிறிய பொட்டலங்கள் கீழே விழுந்ததைக் கண்டதும் லக்ஷ்மிக்குத்திடுக்கிட்டது...இதென்ன பொட்டலம்? கையில் தொடவும் பயமாயிருக்கிறதே!....என்ற குழப்பத்துடன் பொட்டலங்களைக் கூர்ந்து கவனித்தாள். அதன்மேல்....மஞ்சள், குங்குமம் சந்தனம், என்று வெகுசிறிய எழுத்தில் எழுதியிருந்ததைக் கண்டதும் மங்களகரமான

வஸ்துக்கள்தான் எனினும் யாராவது விரோதிகள் மந்திரம் செய்துவைத்திருப்பார்களோ? ஒன்றுமே புரியவில்லையே, என்ன செய்யலாம்? கடிதத்தையே படிக்கலாமா? அல்லது இதை யிப்படியே அம்மாவிடம் காட்டி யோசனைகேட்கலாமா?... என்ற ஒரு குழப்பம் உண்டாகிவிட்டதால் தம்பித்து நின்று விட்டாள். மந்திரம், சூனியம் முதலிய பலபல எண்ணங்கள் மனத்தில் தோன்றி பயங்கரத்தையே அளித்தது.

28

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ற சேகரனும் நீலகண்டனும் வெகு பரபரப்புடன் இன்ஸ்பெக்டரைப் பார்க்கவேண்டும் என்று கேட்டபோது அங்கிருந்த மற்றொரு அதிகாரி இவர்கள் யாரு என்று விசாரித்தறிந்தும், அவர் வெகுவெகு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்து "இதென்ன ஸார், வேடிக்கை? மூலத் தோட்டத்தில் ஸ்ரீமான் நீலகண்டனை யாரோ கொலைசெய்துவிட்டார்கள். உடனே போலீஸ் படையுடன் வரவேண்டும் என்று போன்வந்தது. அடுத்த க்ஷணமே இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் போலீஸ் வீரர்களுடன் போயிருக்கிறார்கள். அதே நீலகண்டமா இங்கு வந்திருப்பது? இது ஏதோ பெரிய சூழ்ச்சி நிறைந்த சதிகாரக் கூட்டத்தின் சூழ்ச்சியாக இருக்கவேண்டுமேயன்றி வேறல்ல; உங்களுக்கு இன்ஸ்பெக்டரே போன் செய்ததுபோலவா அயோக்யப் பயல் செய்தான்! ஸார்! உடனே இன்னும் தக்க பந்தோபஸ்துடன் நாம் இப்போதே கிளம்பிப்போய் அதே இடத்தில் அவர்களுக்கு எத்தகைய ஆபத்தும் இல்லையா? என்று கவனிக்க வேண்டும். ஏன் ஸார்! உங்களுக்கு விரோதிகள் யாராவது இருக்கிறார்களா?" என்று படபடப்பாகப் பேசியபடியே ப்ரயாணத்திற்கும் ஆயத்தமாகக் கிளம்பினர்.

இதைக்கேட்ட சேகரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தனக்கு இதுவரையில் விரோதி என்கிற பெயரே கிடையாதே; இந்தச் சினிமாக்காரக் கூட்டத்தின் மிரட்டலும் தடபுடலும் அவர்கள்தான் விரோதி என்று கூறவேண்டுமேயன்றி வேறு யாருமே கிடையாதே. இதை நான் என்னவென்று எப்படிச் சொல்வேன்!.........என்று குழம்பினான். எனினும் மெல்ல சமாளித்துக்கொண்டு மோட்டார் விபத்து நடந்தது முதல் தனக்கு வந்துள்ள டெலிபோன் செய்தி, கடிதச் செய்தி முதலிய சகலத்தையும் அதிகாரியிடம் கூறிவிட்டான்.

இதைக்கேட்ட அதிகாரி, வியப்புடன், "ஸரி! இனி தாமதிக்கவே கூடாது; கிளம்புங்கள்; உங்கள் வண்டியிலேயே நாம் போவோம்; ஜீப்பில் பாதுகாப்புப் படையினர் வரட்டும்" என்று சொல்லி அவர்களையும் எச்சரித்துப் பின் தானும் கிளம்பினர்.

அதேசமயம் டெலிபோன் மணி யடித்ததால் அதிகாரி டெலிபோனில் பேசவந்தார்; ஹல்லோ! என்ன! என்ன! குப்புஸாமியா பேசுகிறது? நிஜமான குப்புஸாமிதானா?......

என்ன எஜமான்! குரல்கூடத் தெரியவில்லையா? நான்தான் பேசுகிறேன்; ரொம்ப ஆபத்தான விஷயம் எஜமான்!

அதிகாரி:—ஆபத்தா! என்னப்பா விஷயம்? மூலத்தோட்டத்துக்குப் போன இன்ஸ்பெக்டருடன்கூட நீயும் போகவில்லையா?...நீ இப்போது எங்கிருந்து பேசுகிறாய்?

குப்புஸாமி:-எஜமான்! ஆஸ்பத்திரியிலிருந்து பேசுகிறேன். போனவாரம் கோயில் தெருவுலே ஒரு பெரிய கொள்ளை நடந்ததே; அதில் சம்மந்தப்பட்ட கருப்பனையும் சடையனையும் நம்ப இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் புடிச்சு உதைச்சு கைதி செய்தாரல்லவா? அந்தத் திருட்டுப் பசங்களின் கையாளுங்க நம்ப ஐயாவே பழிதீக்கரத்துக்காகவே மூலத்தோட்டத்தில் ஒரு கொலை நடந்ததாகச் சொல்லி அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார்களாம். அதோடு சில சினிமாக்காரர்களும் சேர்ந்துகொண்டு யாரோ ஒரு சினிமா ராணியை மோட்டார் விபத்தில் மாட்டச்செய்து விட்டதற்காக இந்த ஊர் உத்யோகஸ்தர் ஸ்ரீமான் சேகரனை அங்கு ஏதோ ஒரு சாக்குச்சொல்லி வரவழைத்து, அவரையும் ஒரேமட்டாகத் தீத்துப்புட நெனைச்சாங்களாம். அவங்க எதனாலோ வரவில்லை; நம்ப ஐயாவெ பாத்ததும் புலிபோல் சுத்திகினு அடி அடின்னு அடிச்சுட்டாங்க! நாங்க உடனே அவங்க கால்களில் சுட்டுவிட்டு எல்லாரையும் ஆஸ்பத்ரிக்கு கொண்டுவந்து சேத்துவிட்டு உங்களுக்கு போன் செய்கிறேன். ஒடனே ஆஸ்பத்திரிக்கு வாருங்கள்.

அதிகாரி:—எம்பா! ஐயாவுக்கு அடிரொம்ப பட்டிருக்கா!

குப்புஸாமி:—அதெல்லாம் ஒன்னுமில்லீங்க பயப்பட வேண்டாம். இந்த முரட்டுப் பசங்களெ ஏவித்தான் சினிமாக்காரங்க யாரோ உள்உளவறிந்து சேகரனுக்கு ஆபத்து விளைக்கப் பாத்தானுங்க! நல்ல வேளையாக அது ஒன்றும் நடக்கலே; ஒடனேவாங்க...

என்று பேசிவிட்டுச் சென்றான். இதைக்கேட்ட அதிகாரிக்கு வியப்பின்மீது வியப்பு உண்டாகியது அருகிலேயே இருக்கும் நீலகண்டத்திற்கும் சேகரனுக்கும் விவரமாகத் தெரியவில்லை எனினும், ஏதோ சதிகாரக் கூட்டத்தின் சூழ்ச்சி நடந்து விட்டது என்றது வரையில் தெரிந்துவிட்டது. அதிகாரியும், “ஸார்! நீங்கள் பெரிய பாக்யசாலி சார்! ரயில்வேகேட்டு போடப்படாமலிருந்தால் உங்கள் காரும் மூலத்தோட்டத்துக்குச் சென்றிருக்கும்; விபத்தில் நீங்களும் அகப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பெற்

ரோர்கள் செய்த புண்ணியமும் உங்கள் மனைவிசெய்த பாக்யமுந்தான் நீங்கள் தப்பிப்பிழைத்தீர்கள். ஏகாம்பரத்திற்கு நல்ல அடியாம். ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டிருக்கிருர்களாம். நீங்கள் சந்தேகப்பட்டபடியே யாரோ சினிமாக்காரிக்கு வேண்டிய கையாள்கள் செய்த சதியான வேலையாம் இது...சரி! உடனே ஆஸ்பத்திரிக்குப் போகலாம் வாருங்கள்'' என்று அவர்களையும் அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்ருர்.

அதே ஆஸ்பத்ரியில்தான் சினிமாராணியும் படுத்திருப்பதாலும் வீதிப்பக்கம் கூட்டம் அபரிமிதமாக இருந்ததைப் பார்த்திருப்பதாலும் சேகானுக்கு அது வேறு பயமாகவே இருந்தது. எனினும் போலீஸ் அதிகாரியுடன்கூட வருவதால் ஒருவித ஆபத்தும் சேராது என்ற தைரியமும் கூடவே தோன்றியது. ஆஸ்பத்திரி வாயிலில் உள்ள கூட்டத்தையும் கலவரத்தையுங் கண்ட அதிகாரி முதலில் தமது வீரர்களை விட்டுக் கூட்டத்தை விலக்கிவிடச் செய்துவிட்டுத் தாம் காருடன் உள்ளே சென்றுவிட்டார்.

சேகரன் மனத்திற்குள் சினிமக்காரியின் விஷயம் புரிய முடியாத சங்கடத்தை உண்டாக்கி வருத்தியது. இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் இருந்த இடத்திற்கு இவர்கள் நேரில் போனுர்கள். உண்மையில் இன்ஸ்பெக்டருக்கு நல்ல அடிபடவில்லை. சிறிது காயம் உண்டாகியிருந்ததற்கும் மருந்துகள் போட்டுக்கட்டியிருந்ததால் தெம்பாயும் ஒரு புதிய சந்தோஷ உணர்ச்சியுடனும் உட்கார்ந்திருந்தார். இவர்களைக் கண்டதும் சிரித்த முகத்துடன் வரவேற்ருர். "மிஸ்டர் சேகர்! உமக்கும் சரியான மண்டகப்படி நடத்த ஏற்பாடு செய்திருந்த விருந்தில் நீர் தப்பித்துவிட்டீர். நான் மாட்டிக்கொண்டதனுல் தான் இந்தக் கழுதைகளைப் பிடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த மூலத்தோட்ட இடமே வெறும் உதவாக்கரை இடமாகிவிட்டது. எப்போது பார்த்தாலும் கொலை, கொள்ளை, மோசடி, பெண்சோரம்...முதலிய கோரங்கள் நடப்பதற்கு இடமாகிவிட்டதேயன்றி அந்தத் தோட்டத்தினுல் வேறு உபயோகமே இல்லை" என்ருர்.

நீலகண்டன்:—இன்ஸ்பெக்டர் ஸார்! என் குடும்பத்திற்கு ஏற்படவிருந்த பேராபத்தை நீக்கி என் வயிற்றில் பாலை வார்த்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் ஒரு முக்யமான காரியமாய் மூலத்தோட்டத்தின் சமீபத்திற்குத்தான் சென்றிருந்தேன், ஸார்! என் காரியம் முடிந்துவிட்டதால் நான் வெகு சீக்கிரம் வந்துவிடமுடிந்தது. எல்லாம் நன்மைக்கே என்கிறபடி சகலமும் கடவுளின் க்ருபையால் நன்மையாகவே முடிந்துவிட்டது.

இந்த சம்பவம் நிகழ்ந்திராவிட்டால் இத்தனை அயோக்யர்களையும் சேர்ந்து ஓரே சமயத்தில் பிடித்திருக்கமுடியாதல்லவா!

சேகர்:—ஸார்! உங்களுக்கு அதிகமான காயம்படாதிருந்ததுபற்றி மெத்த சந்தோஷம். சினிமாக்காரி இறந்துவிட்டதாக வீதியில் அமளிதுமளி படுகிறதே, அதன் உண்மை என்ன ஸார்?

இன்ஸ்பெக்:—உண்மையா?... அவள் கொட்டாப்புளிபோல் இருக்கிருள். அவளுடைய அன்பர்களும் சினிமாப்படம் எடுப்பதற்காக முன்பணங்கொடுத்து ஏற்படுத்தி விட்டவர்களும் அவள் இறந்து விட்டால் பெரிய நஷ்டம் உண்டாகிவிடுமே என்று துடிக்கிருர்கள். அதோடு இவளுடைய எதிரிகள் சிலர்—முதலாளிகளிலேயே எதிரிகள் சிலர்—இவள் மரணத்தையும் அல்லது இனி நடிக்கமுடியாதபடி அங்கஹீனத்தையும் கோரி பெரிய கலாட்டா செய்கிருர்கள். நம்ம ஜவான்கள் கொலைகளவு முதலிய விஷயங்களில் துப்பறிவதைவிட இந்த விஷயத்தில் ப்ரமாதமான துப்பறியும் வேலைசெய்து கண்டுபிடித்திருக்கும் விஷயத்தை நான் இப்போதுதான் அறிந்தேன்...

என்றதைக்கேட்ட சேகரன் அவஸரத்துடன் "அப்படியா ஸார்? இந்த சினிமாக்காரர்களில் சிலர் என் மீது எதற்காக திடீரென்று த்வேஷம் பாராட்டி விபத்தை உண்டாக்க வேணும்? இதற்குக் காரணம் என்னவாகும்? எனக்கு எத்தனை விதம் நினைத்துப்பார்த்தாலும் புரியவே இல்லை. இத்தகைய புதிய குழப்பத்தினுல் என்னைவிட என்மனைவி மிகவும் பயந்து நடுங்கிப்போகிருள். எந்த விதத்திலும் எனக்கும் அவர்களுக்கும் சம்மந்தமே கிடையாதே ஸார்..." என்று பயமும் ஒருவித உணர்ச்சியும் தோன்றக்கூறினுன்.

இதுகேட்ட நீலகண்டன் சிரித்துக்கொண்டே, "ஏன் புரியவில்லை மாப்பிள்ளை! சகலத்திற்கும் காரணம் வெள்ளையப்பன்! ஏதோ புரியாப் புதிராக உங்களுக்கு ஏராளமான பணத்தை பகவான் கொடுப்பதால் அதை அபகரிக்கவும், அந்த பெருந்தொகையை என்னிடமிருந்து பறிக்கவும் சிலர் துப்பறிந்து சூழ்ச்சி செய்திருப்பது எனக்குக்கூடத் தெரியும். அதனுல்தான் ஏதோ அர்த்தமில்லாத கேள்விகளைச் சிலர் கேட்பதும், மிரட்டல், உருட்டலுடன் மொட்டைக் கடிதங்கள் எழுதுவதும் முதலிய ஏதேதோ நடக்கிறது. இத்தகைய செய்கையையே தொழிலாகக்கொண்டு சிலர் உயிர் வாழுகிருர்கள். சரி! நாம் இங்கு நெடுநேரம் தங்கிவிட்டால் வீட்டில் லக்ஷ்மி கவலைப்படுவாள்... ஸார் நாங்கள் போய்வருகிறோம். ஏதோ கடவுள் கிருபையினுல் காப்பாற்றப் பட்டோம். மறுபடி நாளைக்கு வந்து பார்க்கிறோம்" என்று கூறிக் கிளம்பினுர்கள்.

"சரி! உங்களுக்கு வரும் எந்த மொட்டைக் கடிதங்களோ, டெலிபோன் தகவல்களோ, அவற்றை உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள். இந்த வீண் பூச்சி மிரட்டலுக்குப் பயப்படவேண்டாம். தைரியமாயிருங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். தேவையானால் சொல்லி யனுப்புகிறேன்" என்று தேறுதல் கூறியனுப்பினர். இருவரும் பெரிய பாரத்தைத் தலையிலிருந்து இறக்கியது போன்ற ஒரு நிம்மதி உண்டாகிய நிலையில் வெளியே வந்தார்கள். வெளி வாசலில் கூட்டம் கலைக்கப்பட்டிருந்ததால் இவர்கள் எத்தகைய தொந்தரவும் இன்றி வெளியேற அனுகூலமாக இருந்தது.

29

வீட்டில் லக்ஷ்மி கடிதத்தைப் படிக்கவும் மாட்டாது அந்தப் பொட்டளங்களை எடுக்கவும் பயந்து தவிக்கும்போது அவ்வறையில் மாட்டியிருந்த லக்ஷ்மி படத்தில் காலையில் சமர்ப்பித்திருந்த புஷ்பம் தானாகக் காற்றில் ஆடிக் கீழே விழுந்த வேகத்தில் லக்ஷ்மியின் மடியிலேயேவந்து சேர்ந்தது.

இந்த ஆச்சரியத்தைக் கண்ட லக்ஷ்மி சடக்கென்று எழுந்து அந்தப் புஷ்பத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டு தலையில் சூட்டிக்கொண்டாள். எந்த ஒரு காரியத்தையாவது நினைத்துக்கொண்டிருக்கையில் திருவிளக்கிலிருந்து பொறி விழுந்தாலும் சரி, ஸ்வாமியின் திருமேனியிலிருந்து புஷ்பம் கீழே விழுந்தாலும் சரி, பழத்தை பகவான் கையில் ஸமர்ப்பித்திருந்து அது விழுந்தாலும் சரி, இவைகள் நல்ல சுபசகுனம் என்றும், காரியத்தில் தடையின்றி ஜெயப்ரதமாக முடியும் என்றும் பெரியோர்கள் சொல்வதை லக்ஷ்மி பலதரம் கேட்டு இருக்கிறாள்.

சொக்கம்மாளின் வாழ்க்கையில் ப்ரத்யக்ஷமாய்ப் பல சமயங்களில் இத்தகைய சுபசகுனங்களைப் பார்த்திருக்கிறாள். முக்யமாக லக்ஷ்மியின் கல்யாண விஷயத்திலும்கோயில்குத்து விளக்கிலிருந்து பொறி விழுந்ததைக் கண்ட பிறகுதான் ஊர்ஜிதமாக முனைந்தாள். இவைகளெல்லாம் லட்சுமிக்கு நன்றாகத் தெரியுமாதலால் திடீரென்று ஒரு புத்துணர்ச்சி குபீரென்று உண்டாகியதும் லட்சுமி படத்தை விழுந்துவிழுந்து வணங்கி விட்டு, பொட்டளங்களைப் பிரித்து மஞ்சள், குங்குமம், சந்தனம் மூன்றையும் லக்ஷ்மி படத்திற்குச் சமர்ப்பித்துப் பின்னர் தானும் மங்களகரமாக அணிந்துகொண்டு மனத்தில்மகிழ்ச்சியுடன் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்:

"புண்ணியமே உருவெடுத்து வந்த புனித தேவியே! உங்கள் பாதங்களுக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம் செய்து

எழுதும் விண்ணப்பம். தாயே! உங்களை நான் கண்ணால் நேரில் கண்டதில்லை. எனினும் இதயக் கண்ணால் ப்ரதிதினமும் பார்த்து என் மனமாரவணங்கிப் பூரிப்பதோடு உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சகல ஸௌபாக்யங்களையும்கொடுத்து ரக்ஷிக்கும்படி வேண்டிக் கொள்வது எனது நித்தியக் கடமையில் ஒன்றாகச் செய்து வருவதை நான் என்னுடைய பிறவியின் ஸார்த்தகமாக எண்ணுகிறேன்; என்னுடைய ஜீவிதத்தில் இதொன்றுதான் நான்கண்ட உண்மையான பக்திமயமான இன்பமாகும்.

முன்பின்னறியாத யாரோ ஒரு அபலை இப்படி எதற்காக எழுதுகிறாள் என்று நீங்கள்வியப்புறலாம். அது சகஜந்தான். எனது கடைசி மூச்சு வரையில் நான் இவ்விஷயத்தை வெளியிட வேண்டாம் என்றுதான் எண்ணி இருந்தேன், ஆனால், அவச்யமாக வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் இதை எழுதுகிறேன். இது விஷயம் உங்கள் இதயபாதாள அறையில் துலாம்பரமாக வைத்துப் பூட்டிவிடுங்கள்; இதுதான் எனது வேண்டுகோள். உங்கள் கணவருக்குக்கூடத் தெரியவேண்டாம்.

இந்தப்பாவி தாசிகுலத்தில் பிறந்தவள். தந்தையின் வம்சமறியாத துர்ப்பாக்யக் குலத்தின் அவகேடுபோல் தாயார் கேவலமான நிலைமையில் வாழ்க்கை நடத்திப் பாபப்பிண்டமாகப் பணக்குவியலுக்கிடையில் என்னைப் பெற்றுப் பணத்தின்பக்கத்தில் பிணமாக—மணமற்றகாகிதமலராக—ஒளியற்ற மணியாக—வளர்த்து விட்டாள். யுந்தவயதடையும் வரையில் விபரீதத்தின் வெட்கக்கேடு தெரியாமல் வளர்ந்து விட்டேன். படிக்கும் ஆசையில் பலபல புத்தகங்களை லைப்ரரிகளின் மூலம் படித்து பாரத நாட்டின் பண்பாட்டுச் சிறப்பையும், கலாமஹிமையையும், கற்பின் பவித்திரத் தன்மையையும் நன்றாக அறிந்தேன். தாசி குலத்தின் திலகமாக உதித்தும் மணிமேகலையின் சிறப்பை அறிந்தேன். காலத்தின் போக்கில் நம் நாட்டில் பலசட்டங்கள் வந்து குறுக்கே தடுத்தும் என் தாயின் ஊழல் வாழ்க்கையை வெறுத்து, அவள் வயிற்றில் பிறந்த நானே அவளைக் கண்டித்தேன். கூட வாழ மறுத்து, படிப்பை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு ஹாஸ்டலுக்குச் சென்று விட்டேன்.

என் தாய்செய்த கிளர்ச்சிகளெல்லாம் வீணாகியது. என் பிடிவாத குணத்துடன் S. S. L. C. யை முடித்துவிட்டுக் காலேஜ் படிப்புக்குச் சென்றேன். குனிந்த தலை நிமிராமல் என் கல்வியை மட்டும் நன்றாகக் கற்றுவந்தேன். காலேஜின் வருஷக் கொண்டாட்டத்தன்று என்னைப் பாடவேணுமென்று ப்ரன்ஸிபால் தொந்தரவு செய்ததால் ஒப்புக்கொண்டேன்.

அதே காலேஜில்தான் தங்கள் கணவர் புண்ய புருஷர் படித்து வருகிறார் என்பதை அன்று நடந்த நாடகத்தில் அவர் ஸத்யவானாக வேடந்தாங்கி நடித்தபோது கண்டுகொண்டேன். நான் பாடும் நிமித்தம் மேடை ஏறவேண்டிய சந்தர்ப்பம் வந்ததால் அவரை அங்கு வேஷத்தில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. பிறகு காலேஜில் என்னையறியாமல் அவரைப் பார்க்கவும் அவருடைய அபார அழகில் லயிக்கவும் என்னையே நான் கட்டுப்படுத்த முடியாமல் அன்பின் வழியே விட்டுவிட்டேன். ஆனால், இந்தக் குற்றத்திற்கு அவர் அணுவளவும் பொறுப்பாளியல்ல.

தாயே! வீணாக உங்களுக்கு விஷயத்தை—அதிலும் வேசியின் உதவாக்கரை விஷயத்தை—சொல்லிமனத்திற்கு அருவருப்பை உண்டாக்கவில்லை. முக்ய அம்சத்தைச் சொல்லிவிடுகிறேன். கேவலம் ஒரு தாசியான நான் உத்தம குடும்பத்தில் உதித்த அந்த ஒழுக்கம் மிக்க புருஷோத்தமரை மணப்பது என்பதும் நடக்காத காரியம். ஒரு வைப்பாட்டியாக நான் இருக்கவும் விரும்பவில்லை.

என் தாயார் நோயாளியாகிவிட்ட சமயம் என்னை எத்தனையோ வற்புறுத்தி பொட்டுக்கட்டிவிடப்பார்த்தாள். நான் இணங்கவேயில்லை. பணத்திற்காக என் தாயாரைச் சேர்ந்த சிலர் கழுகுபோல் கண்ணோட்டத்துடன் வட்டமிட்டுக்கொண்டிருந்தார்கள். இன்னமும் இருக்கிறார்கள்.

என் தாயார் படுத்தவள் எழுந்திருக்கவில்லை. அவள் நோரிப்ரார்த்தனை செய்த—தேடித்தேடி புதையல்போல் மூட்டை சேர்த்துக்கொண்டிருந்த—பாப உலகிற்குத் துலைந்துபோனாள். நல்ல வேளையாக சொத்து பூராவும் என்னுடைய இஷ்டம் போல் செலவழிக்கலாம் என்று ஒரு வில்லும் (Will) எழுதி விட்டுச் சென்றாள்.

சில மாதங்களில் தண்டசோத்துக் கூட்டத்தை எல்லாம் விரட்டிவிட்டு என் வீட்டையே ஒரு சிறந்த புனித ஆலயமாக மாற்றி பக்திவளர்க்கும் போதனாசாலையாக்கிவிட்டேன். எனக்குள்ள பணம் பூராவும் தங்கள் பிதா காஷியராயிருக்கும் பாங்கியில்தானிருப்பதால் நான் பாங்கியில் பணம் வாங்கப் போவதுண்டு. அதுபோல் ஒரு சமயம் சென்றபோது தான் உங்களுடைய திருமணத்தைப்பற்றி உங்கள் பிதா தமது சிநேகிதரிடம்பேசுவதைநான் தற்செயலாகக்கேட்கநேர்ந்தது. எந்த ஒருதெய்வம் என்னிதய பீடத்தில் ஆரோகணிக்கிறதோ, அந்தத்தெய்வத்தைத் தாங்கள் மாலையிடும் பேறுபெற்றதை அறிந்து பூரித்தேன், புலகிதமுற்றேன். உங்கள் தகப்பனார் பேச்சிலிருந்து அவர்கள் வரதக்ஷிணை அதிகம் கேட்பதால் கல்யாணம் தடைபட்டுவிடுமோ என்று அவர் வருத்தப்பட்டதையும் அறிந்தேன். அந்த நிமிடமே என்னுடைய இதயத்

தில் ஒரு ப்ரதிக்ஞையைச் செய்துகொண்டேன். அந்த மகானுபாவருக்காகவே நான் முற்றும் அர்ப்பணமாக வேண்டிய அளவு பாக்யம் செய்யாத தாசி குலத்தில் பிறந்து விட்டதால் இப்பாவியின் பணத்தில் குறைந்தபக்ஷம் ஒரு லக்ஷரூபாயை யாவது அவருக்கு மறைமுகமாகச் சேர்த்துவிடவேண்டும் என்று சங்கல்பம் செய்துகொண்டேன்.

தங்கள் பிதா ஆபீஸிலிருந்து வீட்டிற்குப் போவதற்கு முன்பு அவரைத் தனிமையில் சந்தித்து சத்தியம் வாங்கிக் கொண்டு சகல விஷயத்தையும் கூறி பாங்கியிலிருந்து 50 ஆயிரம் ரூபாயை வாங்கி அவரிடம் கொடுத்தேன். எப்படியும் தர்மம் செய்வதற்கே பயன்படக்கூடிய பணத்தை அவருடைய போஷணைக்காகச் செலவிடும்படி எனது அந்தராத்மா சொல்லியது! இது கடவுளின் செயலேயன்றிவேறல்ல.

முதலில் தங்கள் பிதா இதற்குச் சம்மதிக்கவில்லை. பிறகு எனது வேண்டுகோளுக்கிணங்கி இதை நிறைவேற்றினார். அவர் திடீரென்று இத்தகைய அபார செலவு செய்வதைக் கண்டு முதலில் உலகம் பலவிதமாகச் சொல்வது இருக்கட்டும். நீங்கள் அதே கவலையால் வாடுவதாயும் மயக்கம் போட்டு விடுவதாயும் உடல் நிலையே மாறிவிட்டதாயும், உங்கள்பிதா பாங்கியில் களவாடித்தான் இப்படிச் செய்கிறாரோ? அதனால் என்ன அபவாதமும் ஆபத்தும் வந்து விடுமோ?...என்று பயப்படுவதாயும் நான் கேள்விப்பட்டுத்தான் அவருக்கு இத்தகைய விபத்து எதுவுமே வராது பயப்படவேண்டாம் என்று உங்களைத் தேற்றுவதற்காகவே இதை எழுதி மஞ்சள் குங்குமத்துடன் அனுப்புகிறேன். தங்கள் பிதா ஏதோ லாட்டரியில் பணம்போட்டு அதில் பரிசு வந்து இத்தனையும் செய்திருப்பதாக ஒரு வதந்தியை நானே உண்டாக்கி விடுகிறேன். இனி இது விஷயத்தில் எள்ளளவும் பயப்பட வேண்டாம். தாயே! சத்யமாய் இந்த விஷயத்தைத் தாங்கள் வெளியில் சொல்லவே கூடாது. தங்கள் பர்த்தாவுக்கு அஸலே தெரியக்கூடாது. எனக்குத் தாங்கள் செய்யவேண்டிய உபகாரம் இதுதான். நான் மீண்டும் எனது வந்தனங்களைச் செலுத்துகிறேன். இனி என்னைப்பற்றிச் சற்றும் கவலையே இல்லை. பகவானருளால் தாங்களும் தங்கள் பர்த்தாவும் வெகு வெகு சந்தோஷமாக வாழ ஸர்வேச்வரனை வேண்டுகிறேன். நான்சன்யாசினியாகி விட்டேன். பழைய அழுக்கு என்மனத்தி வில்லை. என்னை யாரும் வந்தும் பார்க்க வேண்டாமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நவீனமணிமேகலையாக நான் வாழவிரும்புகிறேன். என் மனமார்ந்த வந்தனங்கள்."

இங்ஙனம், துறவி.

என்று கதை படிப்பதுபோன்று ஸ்வாரஸ்யமாயும், உணர்ச்சி மிக்கதுமாயிருந்த கடிதத்தைப் படிக்கப்படிக்க லக்ஷ்மிக்கு

ஒன்றுமே அறியாத ஒரு உணர்ச்சிமயமான நிலை உண்டாகி விட்டது. சில நிமிஷங்கள் ஒன்றுமே தோன்றாத சமாதி நிலையில் லயிக்கச்செய்து கண்களில் நீர் பெருகவைத்தது; மெல்ல சமாளித்துக்கொண்டு கடிதத்தைத்திரும்பத் திரும்பப்படித்துத் தனக்குள் கூறமுடியாத உவகையும் பூரிப்பும் பொங்கக் களித்தாள்.

தன் பிதாவுக்கு இனி எத்தகைய விபத்தும் இல்லை என்கிற ஒரு சந்தோஷமே அவளைக் களிவெறி கொள்ளச் செய்து விட்டது. சந்தோஷத்தைத் தன் தாயிடத்தில்மட்டும் சொல்லி மகிழலாமா?...என்று மனம் துடிதுடித்தது.

ஆனால், அந்த த்யாக உத்தமி சத்யமாக இதைப் பிறர் அறியாதவண்ணம் மறைத்துவிடவேண்டுமென்று கேட்டிருப்பதைமீறி எவ்வாறு சொல்வது?...இந்தக் கலியில், அதிலும் இந்த20-ம் நூற்றாண்டில் இத்தகைய உத்தமிகள் இருப்பதைக் காண வியப்பும் திகைப்பும் பொங்கிவருகிறதே!...என்று தனக்குள் எண்ணிப் பூரித்தவண்ணம் கடிதத்தை முதலில் தன் பெட்டிக்குள் பத்திரமாக கைப் பெட்டியின் உள்புறத்தின் அடிபாகத்தில் வைத்துவிட்டாள்.

எப்படியாவது அந்த உத்தமியை ஒருமுறை பார்த்தால் தான் என் ஆவல் தீரும். என்று திகைக்கும்போது சேகரும் நீலகண்டனும் வந்தார்கள்.

லக்ஷ்மியின் முகத்தில் தாண்டவமாடும் புதிய இன்பக் கொந்தளிப்பையும் முகமே ஒரு தனித்த ப்ரகாசத்துடன் விளங்கியதையும் கண்ட இருவருமே வியப்புடன், ‘‘என்ன லக்ஷ்மீ! நீ கவலைப்பட்டுக்கொண்டிருப்பாயோ என்று பயந்தவாறு ஓடிவந்தோம். நல்லவேளை! நம்மைப்பிடித்த பிசாசு துலைந்துபோயிற்று லக்ஷ்மீ!’’ என்று நடந்த சகலவிஷயங்களையும் கூறினார்கள்.

இதைக்கேட்ட லக்ஷ்மி பெரிதும் பேரானந்தக் கடலில் திளைத்து மகிழ்ச்சிப் பதுமையாகிவிட்டாள். அதே சமயம் டெலிபோனில் சேகரனை யாரோ அழைத்ததால் அவன் அதனருகில் சென்றுவிட்டான். ஏற்கெனவே மனத்தில் கொந்தளிப்புடனிருக்கும் லக்ஷ்மி, இதுவே சமயமென்றெண்ணி, ‘‘அப்பா! அப்பா! இத்தனை நாட்களாய் உங்கள் ரகஸியமறியாமல் நான் பட்ட கவலையும் துன்பமும் சொல்லமுடியாது; கடவுள் அதைத் தீர்த்துவைத்து ரக்ஷித்துவிட்டார்’’ என்று கடிதத்தின் விஷயங்களை வெகு சுருக்கமாய்க் கூறிமுடித்துத் தனது உள்ளத்தைத் திறந்துகாட்டினாள்.

இம்மாதிரி நடக்குமென்று இவர் எதிர்பார்க்கவே இல்லை. ஆதலால், அபாரமான வியப்படைந்து, ‘‘லக்ஷ்மி! உன்னுடைய முகவாட்டத்தை நான் உள்ளபடி அறிவேன். இருப்பினும் சமயம் பார்த்து உனக்கு கூறி அந்தச்

சன்யாசினிக்கும் மனம் நோகாமல் காத்து இதற்கோர் வழிசெய்யவேண்டும் என்று எண்ணினேன், உன்னுடைய உடல் நலம் குன்றி உத்ஸாகமிழந்து வாடிப்போவதை அந்த உத்தமி எப்படியோ அறிந்துகொண்டு இதை எழுதி சகலருடைய சிக்கையும் அறுத்துவிட்டாள். குழந்தாய்! இக்கலியில் அத்தகைய ஒரு வ்யக்தியைக் காணவே முடியாதம்மா! எப்படித்தான் மனத்தை வைராக்யப் படுத்திக்கொண்டிருக்கிறாள் தெரியுமா பாவம்!" என்றார்.

மனமுருகிக் கண்ணீர் பெருகும் லக்ஷ்மி, "அப்பா! அந்த அம்மாள் இத்தனை பணத்தைக் கொடுத்திருந்தும் ஏன் பகிரங்கப் படுத்தக்கூடாது என்கிறாள்?" என்றாள். "குழந்தாய்! இப்பாழும் உலகமிருக்கிறதே, இது தூற்றவும், போற்றவும் அஞ்சவே அஞ்சாதம்மா! இதுபற்றி நான் எத்தனையோ அந்த த்யாகியிடம் பேசினேன். ஒரு தாசிப் பெண் ஒரு வாலிபனுக்குப் பணத்தைக் கொடுத்தாள் என்று உலகம் ஏளனம் தான் செய்யும்; அதனால் தாசிக்கும் அவனுக்கும் என்ன தொடர்போ? என்று சந்தேகம் வேறு கிளம்பும்; அதனால் ஒழுக்கத்திற்கே ஹானி விளையும்; விஷயமறியாது வீண் கலவரம் உண்டாகும்; அவரை மணந்த பெண்ணும் தன் கணவன் தாசி லோலனாகத்தானிருந்தானோ என்னவோ? என்று எண்ணக் கூடும். எத்தகைய கலவரத்திற்கும் இடங்கொடுக்காமல் இந்தக் காரியத்தை தன்னுடைய வேண்டுகோளுக்காகச் செய்யவேணும் என்று வெகு வெகு தீர்க்கமாக யோசனை செய்து பேசினாள்.

அந்த உத்தமி விளக்கிக் கூறிய பிறகுதான் எனக்கும் விவரம் புரிந்தது. நானும் இதற்கோர் வழிசெய்யத் துணிந்தேன். புதையல் கிடைத்தது லாட்டரியில் வந்தது...என்று எதையோ சொல்லி என்வரையில் தப்பித்துக்கொள்ளவே இதில் துணிந்து செய்துவிட்டேன். லட்சுமீ! இந்த விஷயத்தை உன் தாயாரிடம்கூடச் சொல்லாதே; மருமகப்பிள்ளையிடம் கூடச் சொல்லவேண்டாம். இனி நீ சந்தோஷமாயிரு. வீணான கவலைக்கு இடந்தராதே. என்றார். "அப்பா! எப்படியாவது அந்தம்மாளைப் பார்த்துவிட்டு வரலாமாப்பா? அவர்களைப் பார்க்கவேண்டும் போலிருக்கிறதப்பா !.........அப்பா ! இன்னொரு முக்யமான விஷயம் உங்களிடம் கேட்கவேண்டும். எங்கம்மாவின் சதோதரி யொருத்தி இறந்து விட்டாளாமே... என்றதும்...

"ஆமாம்! விஷயம் பூராவும் எனக்கு இப்போதுதான் மருமகப்பிள்ளை சொன்னார். ஆதியில் அப்படி நினைத்தது மிகமிகத் தவறு என்பதைப் பிறகு நாங்கள் உணர்ந்து விட்டோம். இத்தனை நல்ல மனிதர், பெரிய உத்யோகத்திலிருக்கிறார் என்பது ஒன்றுமே எனக்குத் தெரியாதம்மா!

நாங்களிருவரும் வரும்போது அவரைப் பார்த்துப் பேசிவிட்டு இந்தப் பயித்தியக்காரக் கூட்டத்தின் விஷயங்களையும் சொல்லிவிட்டோம். அவருக்குள்ளசந்தோஷம்சொல்விமுடியாது. உன் சித்தப்பாவுக்கோ, உன்கணவருக்கோ எத்தகைய கெடுதலும் தான் செய்யவில்லை. இது வேண்டுமென்று யாரோ சொல்லும் சதிகார யோசனையாகும். தன் தவறுதலால்தான் கார்விபத்து உண்டாகியது என்று உத்திராதேவி போலீஸாரிடமும் பெரிய டாக்டரிடமும் வாக்குமூலம் கொடுத்ததோடு இம்மாதிரி துர்ப்ரசாரம் செய்கிறவர்களைத் தாராளமாகப் பிடித்து தண்டிக்கலாம் என்றும் சொல்லி விட்டாளாம். அந்தச்செய்தி அங்கு அவருக்கு டெலிபோன் மூலம் வந்தது. அதுவும் ஒரு பெரிய சந்தோஷமாகி விட்டதல்லவா? என்றார்.

"எப்போதப்பா நாம் அந்த உத்தம சிகாமணியைப் பார்க்கலாம்!" என்றாள். "லக்ஷ்மீ! உனக்கு இக்கடிதம் எழுதியிருப்பதை என்னிடம் சொல்லவே இல்லையம்மா! அவர்கள் இன்று காலை வண்டிக்குத்தான் வடக்கே பதரிவரை தீர்த்த யாத்திரைக்குப் போவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்கள்.

புதிய ஊரில் எங்கே போயிருந்தாய் என்று என்னைக் கேட்டாயே! அந்த உத்தமியின் ஊர் இங்கிருந்து 35 மைல் தூரத்தில்தானிருக்கிறது. பக்கத்து பங்களாவை வாங்கி வைத்து அதன் விஷயமாக சகலமும்தானே செய்திருந்தது எனக்கே வியப்பாகி விட்டது. சாச்வத தர்மநிதிக்குச் சில சாசனங்கள் எழுத வேண்டுமென்று வரச்சொல்லி யிருந்தாள். போய்முடித்துக் கொடுத்துவிட்டு வந்தேன்.

அந்தம்மாள் ஊரிலிருந்துவரக் குறைந்தது இரண்டு மூன்று வருஷங்களாகும். பெரிய பக்தகோடிகளைக் கூட்டிக் கொண்டு பஜனை கோஷ்டியாகப் போய் விட்டார்கள். ஒவ்வொரு ஊரில் மாதக்கணக்காகத் தங்கப்போவதால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே நான் போனேன்.

எனக்குக்கூடத் தெரியாமல் இந்த விஷயத்தை உனக்குத் தெரிவித்திருப்பது அவர்களுடைய அபாரமான குணத்தழகைக் காட்டுகிறது. அந்தம்மாள் சாதாரணப் பெண்ணல்ல! அம்மா! அவள் உத்தம சன்யாசினி—குணக்குன்று—என்றால் அவளுக்கே தகும். தான் தாசி குலத்தில் பிறந்துவிட்ட ஒரு வருத்தம் அவள் நெஞ்சைப் புண்ணாக்குகிறது. தன்னழகைக் குலைப்பதற்காகத் தலையை ஜடைதிரித்துக் காவி உடையணிந்து விட்டாள் என்றால் வேறு சொல்லவேணுமா!...

லக்ஷ்மீ! இன்னொரு சந்தோஷ சமாசாரத்தைச்சொல்ல மறந்துவிட்டேனே; உன் சித்தப்பா வேலையை மாற்றிக் கொண்டுபோவதைத் தடுத்ததோடு அவருடன்கூட நம்ம குழந்தைகள் சிலரை வைத்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்துவிட்

டேன். தவிர, அவருடைய உண்மையான காரியதரிசிக்கு உன் நாத்தனாரை மணம் முடிக்கவும் சேகரும் நானும் அவரிடம் பேசிமுடித்துவிட்டோம். பையனும் சம்மதித்து விட்டான். சீக்கிரத்திலேயே அந்தக் கல்யாணமும் நடக்கும்...."

என்றதைக்கேட்ட லக்ஷ்மி ஒரே பெருமிதத்துடன், "அப்பாடா! எத்தனை கவலைகள் பயங்கரங்கள் நெஞ்சையழுத்தினவோ, அத்தனையும் கதிரவனைக்கண்டு கன இருள் அகல்வதுபோல் விலகியதோடு, பதிலுக்குச் சந்தோஷத்திற்கு மேல் சந்தோஷம் குவிந்துவிட்டதப்பா! நான் வனஜாவிடம் இப்போதே இந்த விஷயத்தைக்கூறிக் கேலிசெய்யப்போகிறேன்....என்றபோது, சேகர் டெலிபோனில் பேசிவிட்டு வந்தான். "யாருமில்லை; சித்தப்பாதான் கூப்பிட்டார். அப்பா எல்லாம் சொல்லிவிட்டாரல்லவா? இன்று இரவு நம்மெல்லோருக்கும் அவர் வீட்டில் சாப்பாடாம். எனக்கு பெரிய வேலையில் ப்ரமோஷனாகிய உத்தரவு இன்று இப்போதுதான் ஆபீஸில் வந்ததாம். அதைச் சொல்லவே கூப்பிட்டாராம்.

லக்ஷ்மீ! இந்த 10,15 தினங்களுக்குள் எத்தனைவிதமான குழப்பங்கள், பயங்கரங்கள் வந்து சூழ்ந்துவிட்டன! எல்லாம் ஒரு வழியாகத் தீர்ந்துவிட்டனவே! ஆனால், இன்னும் ஒரே ஒரு ரகஸியந்தான் புரியவில்லை...என்று முடிப்பதற்குள், லட்ச்மி கடகடவென்று சிரித்துவிட்டு, "அதுவும் புரிந்துவிட்டது. அப்பா க்ராமத்து வீடு ரிப்பேர் செய்யும்போது ஒரு புதையல் கிடைத்ததாம். அது வெளியாருக்குத் தெரிந்தால் சக்காருக்கு எட்டிவிடுமாம். அதனால் ரகஸியமாய்க் கடன் வாங்கிக் கல்யாணத்தைச் செய்ததாகவே நடிக்கிறாராம். இதை நீங்களும் வெளியில் சொல்லவேண்டாம். சரி! இன்று இரவு நாம் நிம்மதியாக விருந்து சாப்பிட்டுக் களிக்கலாம்... அப்பா! முன்னதாக எல்லோருமாகச் சேர்ந்து கோயிலுக்குப் போய்வாலாமா?"

இனி கேட்கவேண்டுமா? இதற்குள் எல்லோரும் வந்து கலந்துகொண்டார்கள். சேகரனுக்கு வந்த விபத்து நீங்கியதனாலும் பெரிய உத்யோக உயர்வு உடனே கிடைத்துவிட்டதனாலும் கும்மாளமும் குதூகலமும் கூறிமுடியாது. இதைவிட நித்ய மங்கள கல்யாண வைபவ சுகம் அந்தக் குடும்பத்திற்கு வேறென்ன இருக்கிறது! மங்களம்! சுபம்!

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" —குறள்

க்ஷேமலாபங்கள்.

ஸ்ரீ கீதாசாரியனின் திருவருள் கடாக்ஷத்தினாலும் மோகினி அன்பர்களின் பேராதரவினாலும் மோகினிச் செல்விக்கு இம்மாதத்துடன் 31 வயது பூர்த்தியாகி, 32-வது ஆண்டு நாளது ஜனவரியில் பிறக்கப்போகிற சந்தோஷத்தை உங்களுடன் நானும் கலந்துகொண்டு களித்து எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது நவீனங்களில் பல சிக்கலான சமயங்களில் அத்புதமாகத் துப்பு துலக்கிய வீரசிங்கம் ராஜாராம் நாயுடு காருவின் ஜீவிய சரிதையை அறிய வாசகர்கள் மிகுந்த ஆவலைப் பலகால் தெரிவித்துள்ளார்கள். நேயர் விருப்பத்தை ஓரளவு த்ருப்தி செய்ய நாளது ஜனவரி இதழ் முதல்

துப்பறியும் வீர சிங்கம் ராஜாராம் நாயுடு

என்கிற 112-வது நாவல் தொடர்ந்து வெளியாகும். தவிர, பகவத்விஷய ரஸாநுபவம், காளிதாஸர் கனவு, இசைப் பகுதி, கன்னட நவீனம், பாலர்மோகினி சிறுகதைகள், வாழ்க்கைக் குறிப்பு, வாழ்க்கை தீபம் முதலியனவும் வெளிவரும்.

மோகினி அன்பர்களுக்கு மாதந்தோறும் அரிய விருந்தளித்து வரும் ப்ரஸித்த அறிஞர்களான ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி, கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, ரா. ஸ்ரீ. தேசிகன், ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன், ஏ. ராஜம்மாள் முதலிய மஹனீயர்களுக்கு மனமார்ந்த நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்கத்தில் தொடர்ந்து வெளியாகும் "நித்யஸ்ரீ:" என்ற 111-வது நவீனமும் "பக்த வில்லி" என்ற மகுடத்துடன் 113-வது வெளியீடும், விரைவில் தனிப் புத்தகங்களாக வெளிவரும். 32-வது ஆண்டு மலர் ஜனவரியில் பொங்கல் மலராக வெளிவராமல் தமிழ்ப் புத்தாண்டு மலராகச் சித்திரையில் வெளியிடத் தீர்மானித்திருக்கிறேன். விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்.

வழக்கப்படி எல்லோரும் பேராதரவளித்து உதவ வேண்டுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

நமது ஸேவா சங்கத்தின்பால் அன்பும் ஆதரவும் கொண்டு கட்டிடத்திற்காக ஸ்ரீமதி பட்டம்மாள் வாஸன் அவர்கள் 200 ரூ. டாக்டர் சகுந்தலா அவர்கள் 101 ரூ. நன்கொடை கொடுத்து உதவியதற்காக என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கிறேன். மற்ற விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

—வை. மு. கோ.

மகாத்மாஜி சேவா சங்கம் (Regd)

"பணப்பேராசை" நாடகம்

ஸ்ரீ கீதாசாரியன் திருவருளால் சங்கத்திற்காகச் சிறிய குடிசை வாங்கி மங்களகரமாய் ஒரு வருஷம் ஆகிறது. இந்த வருஷ விழாவைக் கொண்டாடும் முறையில் இந்த நவம்பர் மீ 12வ "அநுனோதயம்" அல்லது "பணப்பேராசை" என்ற நாடகத்தை நடித்து இச் சங்கத்தார் பொது மக்களின் இதயங்களில் இடம்பெற்று சபாஷ் வாங்கிவிட்டனர்! தயாநிதி நாடகத்திற்குப் பிறகு ஏன் இன்னும் நாடகமே போடவில்லை? என்று அபிமானிகள் சதா கேட்டுக்கொண்டிருந்த ஆவலைச் சரியான படிப் பூர்த்திசெய்து மகிழ்வித்துவிட்டார்கள். நாடகத்தைப் பார்த்த நூற்றுக் கணக்கான சகோதரிகள் வாயாரப் புகழ்ந்து பாராட்டிப் பேசியதும்; 20வ நடந்த பாராட்டுக் கூட்டத்தன்று கொண்டாடிப் பேசியதும் குறிப்பிடத் தக்கது.

தொழிலாளிகளுக்குங்கூட இத்தனை கச்சிதமாக நடிக்கமுடியுமோ? முடியாதோ? அத்தனை சிறப்பாக இருந்தது....என்று பொது மக்கள் வாயாரக் கூறி ஆசீர்வதித்தது ஒன்றே போதும். ஸேதுராமன், சமயல்காரி, இந்திரா, சேகர், மீனுக்ஷி, நாகஸாமி, பார்வதி, மைதிலி, தரகன், நாகரீகக் குடும்பத்தினர், லேடி டாக்டர், லக்ஷ்மீபதி, குறத்தி, கடன்காரன்... ஆகிய ஒவ்வொரு பாத்திரமும் தங்களை மறந்து தத்ரூபமாக நடித்தார்கள். நாகரீகக் குடும்பத்தினரின் நடிப்பு கனஜோர்; சங்கரிடமும் ஸேது ராமய்யரிடமும் தரகன் அரைகுறை இங்கிலீஷில் பேசி சபையோரைக் குலுங்கச் சிரிக்க வடித்துவிட்டான், ஸேதுராமனின் பணப்பேராசையினுல் நடித்த ஒவ்வொரு ஸீனும் இதயத்தைத் தொட்டதாகவே இருந்தது. முதல்முதல் மேடை ஏறி நடித்த மைதிலி நாட்டியத்தினுலும், கவர்ச்சி மிக்க நடிப்பினுலும் தனிப்பெருமை பெற்றுவிட்டாள். பார்வதியின் பூஜை ஸீனில் பாவம் ததும்ப வெகு அத்புதமாகப் பாடிப் பரவசமுறச் செய்ததை என்றுமே மறக்கமுடியாது. மீனுக்ஷியின் பொறுக்கு மணிகளான வார்த்தைகளும், குடும்பத் தலைவி என்கிற கம்பீரம் தோற்ற நடித்ததும் அபாரம்! சேகரின் நடிப்பும் பேச்சும் தனி மெருகிட்டதுபோலவே இருந்தது; நாகஸாமி தன் கவலைக்கேற்ற படி பேச்சும், வேஷப் பொருத்தமும் உணர்ச்சிததும்பும் நடிப்பும் வெகு வெகு நேர்த்தி ; இந்திராவின் குறுகுறுப்பான பார்வையும் பேச்சும் ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு விதமான பாவம் நிறைந்ததாய் இருந்தது. தவிர, தன் அண்ணனின் துயரத்தைக் கண்டு சகிக்காது அவனிடம் பேசிய காட்சி உணர்ச்சியுடன் வெகு பொருத்தமாயிருந்தது. லேடி டாக்டரின் கம்பீரமும் நடிப்பும் மிக நன்றாக இருந்தது. லக்ஷ்மீபதியின் நடிப்பும் சர்மாவின் நடிப்பும் ஏ. ஒன்...என்றால் பொருந்தும். தரகன், சர்மா, சமயல்காரி, மீனுக்ஷி ... ஆகியவர்கள் வரும் ஒவ்வொரு காட்சியும் ஜனங்களின் ஆரவாரத்தை எழுப்பியது. தாயார் நோயாய்ப் படுத்திருக்கையில் மைதிலி நடித்த சோக நடிப்பும் சேகரும் மைதிலியும் சந்திக்கும் கட்டத்தில் இருவருடைய நடிப்பும் பார்ப்பவர்களின் கண்களில் கண்ணீரைக் கக்கவைத்துவிட்டது; குறத்தி, பலே ஜோர்! கடன்காரன் வெகு வெகு மிடுக்காகவும் தத்ரூபமாயும் நடித்தது குறிப்பிடத் தக்கது; மறுபடியும் இதே நாடகத்தைப் பார்க்கவேண்டுமென்று டலர் விரும்புகிறார்கள் என்றால் அதைப்பற்றி அதிகம் சொல்வானேன்?—நாடகம் முதல்தரம்!

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.

ஜகன்மோகினி வெளியீடுகள்
தற்போது கைவசமுள்ள

வை.மு.கோ.

நாவல்கள்

1.	வைதேகி	ரூ. 4—8
7.	கோபாலரத்னம்	1—4
11.	வீரவஸந்தா	1—0
15.	நளினசேகரன்	1—0
25.	பக்ஷமாலிகா	0—12
35.	அனாதைப் பெண்	1—12
42.	உளுத்த இதயம்	0—8
43.	மகிழ்ச்சி உதயம்	1—4
45.	மாலதி	1—0
46.	வத்ஸகுமார்	1—0
49.	படகோட்டி	1—2
50.	ஆத்ம சக்தி	2—0
51.	உணர்ச்சி வெள்ளம்	2—8
52.	சந்தோஷமலர்	2—0
53.	கருணாலயம்	2—0
54.	புகழ்மாலை	1—12
56.	சுடர் விளக்கு	0—12
57.	கலாநிலயம்	1—12
58.	ஞான தீபம்	2—4
59.	வாத்ஸல்யம்	2—0
60.	க்ருபாமந்திர்	1—4
61.	மதுரகீதம்	2—0
62.	பிரார்த்தனை	1—0
64.	மலர்ந்த இதழ்	2—8
65.	அமுத மொழி (சாதா)	2—0
	” (கிளேஸ்)	2—8
66.	பிரதிக்ஞை	1—0
67.	ஆசைப்ரவாகம்	2—0
69.	அபராதி	1—2
70.	வெளுத்த வானம்	2—0
71.	ப்ரதிபலன்	1—8
72.	பவித்திரப்பதுமை	1—8
73.	பெண் தர்மம்	1—0
74.	உண்மைச் சித்திரம்	1—0
75.	தெய்வீக ஒளி	2—0
76.	சிலாசாஸனம்	1—12
77.	புதுமைக்கோயில்	1—4
78.	மனத்தாமரை (மலிவு)	1—0
79.	தபால்விநோதம்	1—0
80.	ஓவியப்பரிசு	1—8
81.	இனிய முரசு	1—0
82.	ஆண்டவனின் அருள்	1—0
83.	இசைப்புயல்	1—8
85.	காலக்கண்ணாடி	1—8
86.	ஜெயபேரிகை	1—8
87.	ஜீவநாடி	2—0
88.	வீராங்கனை	1—12
89.	கானகலா	0—8
90.	தூய உள்ளம்	0—8
91.	ஸௌபாக்யவதி	0—8
92.	ப்ரேமாசிரமம்	0—12
93.	நியாயமழை	0—12
94.	அருணோதயம்*	0—12
95.	மனச்சாட்சி	0—12
96.	ப்ரபஞ்சலீலை	0—8
97.	வெற்றிப் பரிசு	0—8
98.	ரோஜாமலர்	0—8
99.	இந்திரமோஹனா*	1—0
100.	பாதாஞ்ஜலி	2—0
101.	அமைதியின் அஸ்திவாரம்	1—12
102.	நம்பிக்கைப் பாலம்	1—8
103.	சாந்தியின் சிகரம்	4—0
104.	கடமையின் எல்லை	1—12
105.	குலதனம்	0—12
106.	தைரிய லக்ஷ்மி	0—8
107.	சுதந்தரப் பறவை	1—8
108.	நிர்மல நீரோடை	3—0
109.	குணக் குன்று	(அச்சில்)
110.	புனித பவனம்	2—0

*நாடகம்

வை. மு. ஸ்ரீ. நூல்கள்

1.	உதய சூரியன்	1—4
3.	அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி	1—8
4.	ராணி சீலாவதி	1—0
5.	பெண்மணிக் கனல்	1—0
6.	இருளில் ஒளி	1—4
6A.	ஸ்ரீ ஸ்துதி	0—4
7.	தியாகபலி	0—12

வை. மு. பத்மினி ஸ்ரீனிவாஸன்

பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1—0

ப்ர. ப. அண்ணங்கராசாரியர் உரையுடன்

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் 1—0
அபூர்வ ராமாயணம் 1—8

யோகி சுத்தானந்த பாரதியார்

காந்தி கீர்த்தனம் 3—